
யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம்
ஓதியுணர்ந்தொழுக

# நகுலன்
# NAGULAN

இதழ் - 03




2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "நகுலன்"
# சஞ்சிகைக் குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | திரு. த. தயானந்தன் *(அதிபர்)* |
| **இதழாசிரியர்** | : | திருமதி ரு. பகீதரன் |
| **அங்கத்தவர்கள்** | : | திருமதி யா. சத்தியசீலன் |
| | | திருமதி சு. கௌரிகாந்தன் |
| | | திருமதி இ. வசந்தகுமாரி |
| | | திரு. செ. கமலக்கண்ணன் |
| | | திரு. சி. கௌரிதரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மகுட வாசகம் :

ஓதியுணர்ந்தொழுக

## எமது தொலைநோக்கு :

சர்வதேச ரீதியிலும், தேசிய ரீதியிலும் ஏற்படும் மாற்றங்களுக்கு முகங் கொடுக்கக்கூடிய திறமையும் ஆளுமையுமுடைய மாணவரை உருவாக்குதல்.

## Our Vision

Creating students with the ability and Personality to face National and International changes.

## எமது செயல்நோக்கு :

பொறுப்பேற்கப்பட்ட மாணவரை நவீன உலகில் ஏற்பட்டுவரும் அறிவியல், சமூக பண்பாட்டு, ஆன்மீக மாற்றங்களுக்கேற்பத் தயார் செய்தலை உறுதிசெய்தல்.

## Our Mission

Ensuring the Preparation of students taken charge according to the scientific, social, cultural and spiritual changes of the World.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எங்கள் அதிபர்



திரு. த. தயானந்தன் - SLPS III
B.A (Tamil spl), B.Ed (primary), Dip in teach

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருளாசிச் செய்தி

கலங்கரை விளக்காக நின்று பல்வேறு சிரமங்களின் மத்தியில் வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உறுதுணையாக நிற்கும் நகுலேஸ்வரப் பதியில் அமைந்த யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம் 01-07-2014இல் நிறுவுநர் நினைவு நாளையும் பரிசளிப்பு விழாவையும் "நகுலன்" சஞ்சிகை வெளியீட்டையும் ஒன்றாக நிகழ்த்து வதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

இப்பாடசாலையை ஆரம்பிப்பதற்கும் மகாவித்தியாலயமாகத் தரமுயர்த்தப்படுவதற்கும் நானும் ஒருவனாக இருந்து பாடுபட்டது இன்று நடந்தது போல் உள்ளது. இப்பாடசாலையின் நிறுவுநர் வை. கந்தையா, காணியை வழங்கிய சு. கனகசபை ஆகியோர் போற்றப் பட வேண்டியவர்கள்.

தற்போது அதிபராகக் கடமையேற்று இப்பாடசாலையின் நிர்வா கத்தை திறம்பட நடாத்திக் கொண்டிருக்கும் அதிபர். த. தயானந்தன் அவர்கள் நகுலேஸ்வரப் பெருமானை வணங்கி என்னிடம் ஆசிவேண்டி கடமையைப் பொறுப்பேற்றார். அவரின் நிர்வாகம் திறம்பட நடப்பதற்கு நகுலேஸ்வரப் பெருமான் என்றும் துணை நிற்பார்.

அதுமட்டுமல்ல அதிபர் தயானந்தன் அவர்கள் துடிப்பான இளைஞன். ஆலய ஈடுபாடும் இறைபக்தியும் மிக்கவர். சிறந்த சமயச் சொற்பொழிவாளர். கடமையுணர்ச்சி மிக்கவர். இவ்வாறான நல்ல அதிபருடைய காலத்தில் இப்பாடசாலை நல்ல பெறுபேறுகளையும் சாதனைகளையும் படைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல நகுலாம்பிகாதேவி சமேத நகுலேஸ்வரப் பெருமானைப் பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**இங்ஙனம்**
**ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள்**
ஆதீனகர்த்தா
நகுலேஸ்வரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மீண்டும் தொடங்கும் மிடுக்கு

2011ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதி வலிகாமம் வடக்கு மீள் குடியேற்றத்துடன் அங்குள்ள பாடசாலைகளையும் புதிதாக அமைப்பதற்கான அனுமதியும் வழங்கப்பட்டிருந்தது. வலிகாமம் வடக்குப் பகுதியில் பல பாடசாலைகள் முற்றாக அழிக்கப்பட்டிருந்தன. அப்பாடசாலைகளை மீள் கட்டுமானம் செய்வதில் அப்பிரதேசங்களைச் சார்ந்த பெரியவர்களும் கல்விமான்களும் அக்கறையாக இருந்தனர்.

இதில் யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயத்தைச் சார்ந்த பெரியவர்கள் மற்றும் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தைச் சேர்ந்த அறங்காவலர்கள் மிகுந்த ஆர்வமாக இருந்தனர். எமக்கும் இப்பாட சாலையின் பெயர் அதன் சூழலில் இருந்த ஆலயத்தின் காரணமாகப் பரிட்சயமான ஒன்றாகவே இருந்தது.

இப்பாடசாலையைப் பார்வையிடவேண்டும் என்ற எண்ணம் எம்முள் கிளர்ந்தெழுந்தது. வலிகாமம் கல்வி வலயத்தின் தொழிநுட்ப அலுவலரும் மற்றும் சிலரும் சேர்ந்து பாடசாலைக்குச் சென்றிருந்தோம். இப்பாடசாலையைக் கண்ணுற்றதும் எமது கண்கள் கலங்கின. இப்பாடசாலை முற்றாக அழிக்கப்பட்டிருந்தது. பல கட்டடங் களும் தரைமட்டமாக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில் யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம் சண்டிலிப்பாய் பகுதியில் தற்காலிகக் கொட்டகையில் இயங்கிவந்தது. இப்பாடசாலையில் அதிபர் அவர்களும், அவருடன் இணைந்த ஆசிரியர்களும் மாணவரின் கல்வி இழக்கப்படக்கூடாதென்ற நோக்குடன் இப்பாடசாலையை வளப்பற்றாக்குறையுடன் இயக்கி வந்தனர். இப்பாடசாலையையும், இதனுடன் இணைந்த தற்காலிக கொட்டகைகளையும் இடம்பெயர்த்து பழைய இடத்தில் நிர்மானிப்ப தெனத் தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பாடசாலைச் சமூகத்தைச் சார்ந்த பெரியவர்கள், பெற்றோர்கள், மாணவர்கள், அதிபர், ஆசிரியர்களின் அயராத முயற்சியால் முதலில் பாடசாலை வளவு துப்பரவு செய்யப்பட்டு தற்காலிக கொட்டகை அமைக்கப்பட்டு பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது.

2011ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உலக வங்கிக் குழுவினர் தம்மால் மேற்கொள்ளப்படும் வேலைகள் தொட்பான மதிப்பீடொன்றை மேற்கொள்ள வடபகுதி வந்திருந்தனர். அவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தில் தமது அனுசரணையுடன் மேற்கொள்ளப்படும் வேலைகளைப் பார்வையிட்டனர். இதில் ஒரு அம்சமாக பாடசாலை ஒன்றிற்கான அடிக்கல்லையும் நாட்டுவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தனர்.

எமது நினைவிற்கு உடனே வந்த பாடசாலை யா/கீரிமலை நகுலேஸ்வர வித்தியாலயம்தான். அவர்களை அழைத்துச் சென்றோம். நகுலேஸ்வர ஆலயத்தில் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டோம். அங்கிருந்து கட்டடத்திற்கான செங்கற்கள் சில ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு பூசை வழிபாட்டுடன் அடிக்கல் நாட்டும் நிகழ்வு இடம்பெற்றது. அந்தநாள் இன்றும் என் நினைவில் நிலைத்துள்ளது.

தொடர்ந்து கட்டடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கட்டடங்களுக்கு உயிர் கொடுக்கவேண்டிய பாரிய பொறுப்பினை அதிபர், ஆசிரியர்கள் உள்ளிட்ட பாடசாலைச் சமூகத்தினர் ஏற்றுள்ளனர். மீண்டும் இப்பாடசாலைக்கு ஒரு மிடுக்கு ஏற்பட்டுள்ளது. சாதனைகள் பல படைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆ. ராஜேந்திரன்**
மாகாணக் கல்விப் பணிப்பாளர்
வடமாகாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தினால் ஆண்டுதோறும் வெளியிடப்படும் சஞ்சிகையானது இவ்வாண்டும் வெளிவருவதனையிட்டு மகிழ்வடைகின்றேன்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக பல வருடங்களின் பின் தனது சொந்த இடத்திலே இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இச் சஞ்சிகை வெளியீட்டினை மேற் கொள்வது பாராட்டுக்குரிய விடயமாகும்.

ஆசிரியர்களினதும், மாணவர்களினதும் ஆக்கங்களைத் தாங்கி வரும் இச்சஞ்சிகையானது மாணவர்களதும், ஆசிரியர்களதும் எழுத்தாற்றலை வெளிக்கொணர்வதோடு, பலரது சிந்தனைகளுக்கும் செயல்வடிவம் கொடுத்து அவற்றினை அச்சேற்றி ஏனையோரது சிந்தனைகளுக்கும் எடுத்துச் செல்லும் ஊடகமாக அமையுமென்பதில் ஐயமில்லை.

கற்றற் செயற்பாடுகள் மட்டுமன்றி ஏனைய துறைகளிலும் மாணவர்களுக்குள்ள ஆர்வத்திற்கு வித்திடும் இச் சஞ்சிகை வெளியீட்டினை யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் ஆண்டுதோறும் செயற்படுத்தவேண்டும் என்றும் கூறிக்கொள் கின்றேன்.

வெளியிடப்படும் "நகுலன்" இம் மலர் வெளியீட்டிற்காக அயராது உழைத்த அனைவருக்கும் எனது பாராட்டுக்களையும் வாழ்த்துக் களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**செல்வரட்ணம் சந்திரராஜா**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
வலிகாமம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க நகுலன்

யா/கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயம் வருடாவருடம் வெளியிட்டு வரும் நகுலன் சஞ்சிகை இந்த ஆண்டும் மலர்வது குறித்து மகிழ்ச்சியடைகின்றேன்.

நீண்ட காலம் இடம்பெயர்ந்து பல்வேறு இடங்களில் இயங்கி வந்த பாடசாலை தனது சொந்த இடத்தில் இயங்கி வரும் இவ்வேளையில் பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி பெற்று வருகின்றது. கோட்டமட்ட, நிகழ்வுகளில் இடங்களைப் பெறும் புதிய பாடசாலையாக நகுலேஸ்வர மகாவித்தியாலயம் விளங்குவது சிறப்பாகும். வலய மட்டத்தில் நடைபெற்ற நாட்டுக்கூத்து நிகழ்வில் மேடை ஏற்றப்பட்ட "காத்தவராயன் கூத்து" மிகவும் சிறிய, வயது குறைந்த மாணவர்களைக் கொண்டு சிறப்பாகப் பயிற்றுவித்து அரங்கேற்றப்பட்டது. இது மேலும் பாடசாலை வளர்ச்சி பெற்று வருவதைக் காட்டுகின்றது.

திரு. த. தயானந்தன் பல்திறமை கொண்ட அதிபர். பல்வேறு துறைகளின் ஊடாக பாடசாலையை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்கின்றார். மேலும் பாடசாலை வளர்ச்சி பெற இறைவனை வேண்டுகின்றேன்.

**சு. சண்முககுலகுமாரன்**
MEd,B.A, Dip.in Edu, Sc.Trd, S.L.P.S
கோட்டக்கல்விப் பணிப்பாளர்
தெல்லிப்பளை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபரறிக்கை

எல்லாம் வல்ல நகுலாம்பிகை சமேத நகுலேஸ்வரப் பெருமானின் பாதக்கமலங்களை முதற்கண் பணிந்து வணங்கி அவையில் கூடியிருக்கும் அனைவருக்கும் இனிய வணக்கம் கூறி அதிபர் அறிக்கை யினைச் சமர்ப்பிப்பதில் பேருவகையடைகின்றேன்.

தன்னை நாடிவந்த சிறார்களுக்கு அறிவொடு ஒழுக்கமும் அன்பொடு பண்பும் ஊட்டி வளர்க்கும் வித்தியாலய அன்னையை மனத்திலிருத்தி, நிறுவிய வள்ளலாரை எண்ணி அகமகிழ்ந்து வணக்கம் செலுத்தி நன்மலர் தூவி நன்றி செலுத்தும் பொன்னான நன்னாள் இதுவாகும்.

இப்புனிதமான நன்நாளில் கலந்து விழாச்சிறக்க ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் வணக்கத்திற்குரிய ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களே, எமது இனிய அழைப்பை ஏற்று முதன்மை விருந் தினராகக் கலந்து விழாவை முதன்மைப்படுத்திக் கொண்டிருக்கும் வடமாகாண கல்விப்பணிப்பாளர் திரு. ஆ. இராஜேந்திரன் அவர்களே, சிறப்பு விருந்தினராக கலந்து எம்மையெல்லாம் மகிழ்வித்துக் கொண்டிருக்கின்ற பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சி. கந்தசாமி அவர்களே, நினைவுப் பேருரை ஆற்ற வருகை தந்திருக்கும் பழைய மாணவன், மூத்த ஊடக வியலாளர் திரு. ந. பரமேஸ்வரன் அவர்களே, "நகுலன்" சஞ்சிகையின் வெளியீட்டுரையை நிகழ்த்த சபையில் அமர்ந்திருக்கும் ஓய்வு நிலை உப.அதிபர் திருமதி இ. பற்குணராஜா அவர்களே, மதிப்பீட்டு உரையினை ஆற்ற வருகை தந்திருக்கும் யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க பாடசாலை முதல்வர் திரு. த. வாமதேவன் அவர்களே, எமது பாடசாலையின் முன்னைநாள் அதிபர்களே. ஆசிரியர்களே, அயற்பாடசாலை அதிபர்களே, எமது பாடசாலையின் உயர்வுக்காய் அயராது உழைத்து நிற்கும் உபஅதிபர் மற்றும் அன்புசால் ஆசிரியப் பெருந்தகைகளே, பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சபை நிர்வாக உறுப்பினர்களே, அன்பான பெற்றோர்களே, அன்புக்குரிய மாணவச் செல்வங்களே, கல்விசாரா உத்தியோகத்தரே தங்கள் அனைவருக்கும் இனிய காலை வணக்கத்தைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியுறு கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியுரை வழங்கி அமர்ந்திருக்கும் அந்தண சிவாசாரியார் அவர்கள் கீரிமலை நகுலேஸ்வர தேவஸ்தானத்தின் பிரதமகுரு ஆவார். இவர்களின் நல்லாசி எப்பொழுதும் எமது பாடசாலை வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்லக் காரணமாய்த் திகழ்கின்றது.

இன்று பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருப் பவர் வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆவார். மனித ஆற்றலைப் பயன்படுத்துவதில் வல்லவர். "இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண் விடல்" என்ற வள்ளுவர் வாக்கிற் கிணங்க செயற்பட்டு பதவி உயர்வுகள் கண்டவர். பழகுவதற்கு இனியவர். பாடறிந்து ஒழுகுபவர். அவர் இன்றைய விழாவில் முதன்மை விருந்தினராக கலந்து சிறப்பிப்பது எம் மாணவர்கள் பெற்ற பேறே என்றால் மிகையாகாது.

சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் பிரதிக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் கல்வி முகாமைத்துவப் பணி சிறந்தோங்க அயராது உழைப்பவர். எமது பாடசாலை வளர்ச்சியில் அதீத அக்கறை கொண்டவர். எளிமையானவர், எளிதில் அணுகக் கூடியவர்.

நினைவுப் பேருரை ஆற்ற வருகை தந்திருக்கும் ஊடகவியலாளர் திரு. ந. பரமேஸ்வரன் அவர்கள் இம்மண்ணின் மைந்தன். வித்தியாலய அன்னையின் புகழ்பூத்த மாணவர்களுள் ஒருவர். சீர்மிகு எழுத்தாளன், பாடசாலை வரலாறு தெரிந்த ஒருவர். அந்த வகையில் நினைவுப் பேருரை ஆற்றுவதற்குச் சாலச்சிறந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வெளியீட்டுரை நிகழ்த்த வருகை தந்திருக்கும் ஓய்வுநிலை உப அதிபர் திருமதி இ. பற்குணராஜா அவர்கள் இப்பாடசாலையின் புகழ்பூத்த பழைய மாணவி. அத்துடன் நீண்டகாலமாக இப்பாடசாலையில் தான் தேய்ந்து மணங்கமழும் சந்தனம் போன்று நல்லாசிரியப் பணி புரிந்தவர். இன்றும் பாடசாலை வளாச்சிக்காக உழைத்து வருபவர்.

மதிப்பீட்டுரையை ஆற்றுவதற்கு வருகை தந்திருக்கும் அதிபர் திரு. த. வாமதேவன் அவர்கள் சிறந்த பேச்சாளர், சிறந்த சமூக சேவையாளர். புதிய விடயங்களை அறிவதோடு அதனை ஏனையோரிடம் பரிமாறுவதில் அதீத நாட்டம் மிகுந்தவர். அத்தகைய ஒருவர் மதிப்பீட்டுரையை ஆற்றுவது எமது எதிர்கால இலக்கிய முயற்சிகளுக்கு சிறந்த பலனை அளித்து நிற்கும் என்பது திண்ணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலையின் மகுட வாக்கியம் "ஓதியுணர்ந்தொழுகுக". எனவே கல், கற்றபடி ஒழுகு என்பதனை அனுதினமும் ஊட்டும் அன்னை மடியில் தவழுகின்ற மழலைகளாகிய மாணவச் செல்வங்களின் வாழ்வு வளமானதாக அமைய கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளோடு பல்வேறு இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

| **மாணவர் விபரம்** | தொகை |
|---|---|
| தரம் 1 - 5 வரையான மாணவர்களின் எண்ணிக்கை | 97 |
| தரம் 6 - 11 வரையான மாணவர்களின் எண்ணிக்கை | 124 |
| மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | 221 |

**ஆசிரியர் தொகை**

| | |
|---|---|
| கலைப்பட்டதாரிகள் (பொது) | 07 |
| வர்த்தகப் பட்டதாரி | 01 |
| விஞ்ஞானப் பட்டதாரிகள் | 02 |
| நுண்கலைப் பட்டதாரிகள் | 02 |
| பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் | 08 |
| பகுதிநேர ஆங்கில ஆசிரியர் | 01 |
| மொத்தம் | 21 |

**பாடசாலை முகாமைத்துவக் குழு**

திரு. த. தயானந்தன் *(அதிபர்)*

திருமதி யாழினி சத்தியசீலன் *(உபஅதிபர், ஒழுக்காற்றுக்குழு)*

திரு. சி. கௌரிதரன் *(பகுதித்தலைவர் - ஆரம்பப் பிரிவு, ஆலோ. வழிகாட்டலும்)*

திருமதி ரு. பகீதரன் - *பகுதித்தலைவர் தரம் 6 - 9*

திருமதி வசந்தகுமாரி இராமச்சந்திரன் - *பகுதித்தலைவர் தரம் 10 - 11*

திருமதி சுபாஜினி கௌரிகாந்தன் - *விளையாட்டுத்துறைச் செயலர்*

திரு. செ. கமலக்கண்ணன் - *ஒழுக்காற்றுக்குழு*

திருமதி றோ. றங்கநாதன் - *ஆலோசனையும் வழிகாட்டலும்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எம்மோடு புதிதாக இணைந்தவர்கள் :**

திருமதி சி. மாசிலாமணி
திருமதி வ. இராமச்சந்திரன்
திருமதி ரு. பகீதரன்
திரு. த. ரவிதாஸ்
திரு. பா. அருள்ராஜ்
திருமதி வா. திருச்செல்வம்
திருமதி தே. குகதாஸ்
திருமதி சு. சிவசுதர்சன்
திருமதி சு. ஜெயரத்தின

**இடமாற்றம் பெற்றுச் சென்றோர்**

திருமதி வி. விமலச்சந்திரன்
செல்வி சிறிவதனி ஆறுமுகராசா
திருமதி யாமினி சதீஸ்குமார்
திரு. க. கஜேந்திரன்

**மதிய உணவுத் திட்டம்**

இத்திட்டத்தினைத் தேசிய ரீதியில் நீடிப்பதற்கான தேவையை உணர்த்தும் முன்னோடிச் செயற்பாடு எமது பாடசாலையில் சிறப்பாக நடைபெற்றுள்ளது. இவ்விழாவில் வடமாகாண கௌரவ கல்வி அமைச்சர், கனடிய உயர்ஸ்தானிகர்கள், பிரதேச செயலர், பிரதிக் கல்விப் பணிப்பாளர் முதலானோர் கலந்து சிறப்பித்துள்ளனர். இதன் காரணமாக சமையற்கூடமும் World Food நிறுவன அனுசரணையில் வர்ணம் பூசப்பட்டு பாதுகாப்பு ஏற்பாடுகள் செம்மைப்படுத்தப்பட்டுள்ளன. இச் செயற்றிட்டம் பாடசாலையில் சிறப்புற ஆசிரியை திருமதி சி. மாசிலாமணி மற்றும் ஆசிரியர் திரு. செ. கமலக்கண்ணன் ஆகியோர் உழைத்து வருகின்றனர்.

**ஆசிரியர் கழகம்**

இது ஆசிரியரின் நலன் பேணுவதோடு பாடசாலை நிர்வாகச் செயற்பாடுகளுக்குப் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்ற கழகமாகத் திகழ்கின்றது. கழக அங்கத்தவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு நல்லுறவை நாளும் பேணி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**அபிவிருத்திச் சங்கமும் அபிவிருத்திச் சபையும்**

எமது பாடசாலையின் வளர்ச்சியில் இரு தூண்களாக இவ்விரு அமைப்புக்களும் துணை நிற்பதுடன் பாடசாலையின் சகல செயற்பாடு களிலும் விசேட நிகழ்வுகளிலும் பல்வேறு உதவிகளையும் ஆலோசனை களையும் வழங்கி உறுதுணையாகச் செயற்பட்டு வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழைய மாணவர் சங்கம்**

இச் சங்கமானது பாடசாலையின் தேவைகளை அறிந்து பல்வேறு பங்களிப்பினை வழங்கி வருகின்றது. புலம்பெயர் நாடுகளில் வாழ்கின்ற பழைய மாணவர்களின் பங்களிப்புடனும் இங்கு வாழ்கின்ற பழைய மாணவர்களின் பங்களிப்புடனும் பரிசளிப்பு விழா, விளையாட்டுப்போட்டி முதலான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. யாழ் Aid ஊடாக நித்திய ஒளி அனுசரணையுடன் சேவையாற்றும் செல்வி க. புஸ்பரேகா, செல்வி அ. கௌசல்யா ஆகியோரும், முன்னைநாள் ஆசிரியர் மனோன்மணி செல்லத்துரை மற்றும் மலர்விழி கங்காதரன் அவர்களின் அனுசரணையில் சேவையாற்றும் செல்வி அ. ஜெஜிபாவும் எமது பாடசாலையின் கல்வி மற்றும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் மிகுந்த பங்களிப்பை வழங்கி வருகின்றனர்.

**இணைப்பாடவிதானம்**

எத்துறையாயினும் அத்துறையில் செயற்றிறன் என்பது முக்கிய மானது. தொடருறு பயிற்சியினால் மட்டுமே இலக்கை அடைய முடியும். அந்த வகையில் பாடசாலை தன்னகத்தே ஏந்தி நிற்கும் மாணவர்களைக் கொண்டு தத்தம் துறைகளில் முன்னேற்றம் கண்டு வருகின்றது.

**இல்ல மெய்வல்லுநர் போட்டி**

விளையாட்டு மைதானப் பிரச்சினை காரணமாக கடந்த இரு வருடங்களாக நடைபெறாதிருந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இவ்வருடம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. அதன் காரணமாக கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டிக்கான வீரர்களை இலகுவாகத் தெரிவு செய்துகொள்ள முடிந்தது. கோட்டமட்டப் போட்டியில் 13 வயது முதல் 17 வயதின் கீழ்ப்பிரிவு வரையுள்ள மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர். 13 வயதின்கீழ் ஆண்கள் பிரிவில் செல்வன் ஜெ.டிலக்சன் உயரம் பாய்தலில் முதலாம் இடத்தினையும் 17 வயதின் கீழ் பெண்கள் பிரிவில் செல்வி க. கீர்த்தனா 1500 மீற்றர் ஓட்டப் போட்டியில் 2ஆம் இடத்தினையும் பெற்று வலயமட்டப் போட்டியில் பங்குபற்றினர்.

**தமிழ்மொழித்தினம்**

2013/ 2014ஆம் ஆண்டுகளிற்கான கோட்டமட்டத் தமிழ்மொழித் தினப் போட்டியில் வெற்றியீட்டியோர் விபரம் வருமாறு;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலை
## மாணவச் செல்வங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வருடம் | பிரிவு | நிகழ்ச்சி | பெயர் | இடம் |
|---|---|---|---|---|
| 2013 | II | வாசிப்பு | ச. துலக்சன் | 2 |
| 2013 | IV | கட்டுரை வரைதலும் இலக்கியம் நயத்தலும் | சி. ஜென்சிகா | 3 |
| 2014 | IV | பேச்சு | ஜெ. டிபினியா | 2 |

எமது பாடசாலை மாணவர்கள் இவ்வருடம் வலயமட்டத்தில் நாட்டுக் கூத்துப் போட்டியில் பங்குபற்றிப் பலரின் பாராட்டைப் பெற்றுள்ளனர். இதனை நெறியாள்கை செய்த ஆசிரியை செல்வி அ. ஜெஜீபா அவர்களையும் அவரோடு தோள்நின்ற ஏனைய ஆசிரியர்களையும் நன்றியோடு பாராட்டுகின்றேன்.

**ஆரம்பப்பிரிவுப் போட்டிகள்**

இப்போட்டிகள் யாவும் முதற்கண் பாடசாலை மட்டத்தில் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு குடும்பமட்டம், கோட்டமட்டம், வலய மட்டத்தில் பங்குபற்றுமளவுக்கு பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. அதன் பேறுகள் வருமாறு.

| தரம் | நிகழ்ச்சி | பெயர்/குழு | இடங்கள் | |
|---|---|---|---|---|
| | | | குடும்பம் | கோட்டம் |
| 2 | சித்திரப்போட்டி | அ. தனுசியா | 2 | 2 |
| 3 | சித்திரப்போட்டி | தே. யஸ்மினி | 1 | 5 |
| 1 | சிங்கள விநாடிவினா | குழு | 2 | - |
| 2 | சிங்கள விநாடிவினா | குழு | 3 | - |
| 4 | சிங்கள விநாடிவினா | குழு | 1 | 2 |
| 3 | வாய்பாடு மனனம் | குழு | 2 | - |
| 4 | வாய்பாடு மனனம் | குழு | 1 | 2 |
| 5 | வாய்பாடு மனனம் | குழு | 3 | - |
| 2 | துரித கணிதச் செய்கை | அ. தனுசியா | 5 | - |
| 4 | துரித கணிதச் செய்கை | சு. வஜிகரன் | 2 | - |
| 4 | துரித கணிதச் செய்கை | கி. தஸ்மி | 5 | - |

இப்பேறுகளை எய்துவதற்காக உழைத்த ஆரம்பப் பிரிவு ஆசிரியர்கள் அனைவரையும் சிறப்பாகப் பாராட்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விமட்ட அடைவு**

2013ஆம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறு வருமாறு.

| விண்ணப்பித்தோர் | தோற்றியோர் | 70 புள்ளிகளுக்கு மேல் | 100 புள்ளிகளுக்கு மேல் |
|---|---|---|---|
| 15 | 15 | 08 | 02 |

## க.பொ.த (சா/த) பரீட்சைப் பெறுபேறு – 2013

15 மாணவர்கள் தோற்றி மூன்று மாணவர்கள் க.பொ.த (உ/த) கல்வி கற்கத் தகுதி பெற்றுள்ளனர்.

| பாடம் | சித்திவீதம் |
|---|---|
| சைவநெறி | 86.6% |
| தமிழ்மொழி | 46.6% |
| விஞ்ஞானம் | 26.6% |
| கணிதம் | 20% |
| வரலாறு | 20% |
| குடியுரிமை | 46.7% |
| சித்திரம் | 50% |
| சங்கீதம் | 62.5% |
| நடனம் | 25% |
| மனைப் பொருளியல் | 40% |
| ஆங்கிலம் | --- |

உயர் பெறுபேறு - 4A, B, 2C, S - சி. நிருசா

**மன்றங்கள்**

மாணவர்களிடையே இலைமறை காயாக உள்ள அறிவு, திறன், மனப்பாங்கை வெளிக்கொணரவும் மேலும் விருத்தி செய்யும் வகையிலும் மன்றங்களினால் பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. அந்த வகையில் தமிழ் மன்றம், இந்து மன்றம், சமூக விஞ்ஞான மன்றம், ஆங்கில மன்றம், கணித விஞ்ஞான மன்றம், ஆரம்பப்பிரிவு மன்றம், சுற்றாடற் கழகம் என்பன செயற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விநயமான வேண்டுகோள்

எமது பாடசாலையில் மாணவர்களுக்கான வகுப்பறைகளுக்குப் பற்றாக் குறை நிலவுகின்றது. இன்னும் ஆறு வகுப்பறைகள் தேவைப்படுகின்றன. மற்றும் மாணவர்கள் ஒன்றுகூடிப் பிரார்த்தனை செய்வதற்கும், ஒன்றுகூடல் நிகழ்த்துவதற்கும், விழாக்கள் நிகழ்த்து வதற்கும் ஒரு மண்டபமோ அரங்க வசதியோ இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இது தொடர்பாக வேண்டுகோள்கள் பல முன்வைக்கப்பட்டும் முன்னேற்றம் எதுவும் ஏற்படவில்லை. தற்காலிகக் கொட்டகைகள் மாணவர்களின் பாதுகாப்புக் கருதி அகற்ற வேண்டிய நிலையில் பழுதடைந்துள்ள நிலைமையும் சுட்டிக் காட்டப்பட்டும் எதுவித ஏற்பாடுகளும் செய்து தரப்படவில்லை. இத்தேவைகள் பூர்த்தி செய்யப் படுதல் இன்றைய அவசியமும் அவசரமுமான தேவைகளாக உள்ளமை குறிப்பிடத்தக்கன.

## நன்றி நவிலல்

நிறுவுநர் தினமும் பரிசுத்தினமும், சஞ்சிகை வெளியீடும் ஒருசேர நடைபெறுகின்றன. இந்நாளில் நிகழ்வு சிறக்க ஆசியுரை வழங்கிய ராஜராஜஸ்ரீ கு. நகுலேஸ்வரக் குருக்கள் அவர்களுக்கு எமது மனம் நிறைந்த நன்றி.

எமது குறுகிய கால அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக கலந்து விழாவைச் சிறப்பித்த மாகாணக் கல்விப் பணிப்பாளர் அவர்களுக்கும், சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்த பிரதிக் கல்விப்பணிப்பாளர் அவர்களுக்கும் உளப்பூர்வமான நன்றி உரித்தாகுக.

நினைவுப் பேருரையாற்றி நினைவலைகளை மீள எழச்செய்த ஊடகவியலாளர் திரு. ந. பரமேஸ்வரன் அவர்களுக்கும், வெளியீட்டுரை ஆற்றிய ஓய்வுநிலை உபஅதிபர் அவர்களுக்கும், மதிப்பீட்டுரை ஆற்றிய யா/அளவெட்டி தெற்கு அ.மி.த.க. பாடசாலை அதிபர் திரு. த. வாமதேவன் அவர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதில் பேருவகை அடைகின்றேன்.

நிறுவியவர் தினமும் பரிசளிப்பு விழாவிற்கும் நிதி அன்பளிப்புச் செய்தோருக்கும், ஞாபகார்த்த பரிசுகள் வழங்கி மாணவர்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்குவித்து விழாவைச் சிறப்புற நடாத்துவதற்கு உதவிய அன்பர்கள் அனைவருக்கும் எமது இதயங் கனிந்த நன்றி உரித்தாகுக.

நகுலன் சஞ்சிகை வெளியீட்டுக்கான நிதி முழுவதையும் பொறுப்பேற்றதோடு, பாடசாலை முட்கம்பி வேலிக்கு கிளுவங் கதிகால்களைப் போட்டு அறிக்கைப்படுத்துவதற்கு நிதி வழங்கியும் புலம்பெயர் பழையமாணவர்களை ஒன்று சேர்த்து நிதி திரட்டி அனுப்பிய பழைய மாணவன் திரு. உ. பரராஜசேகரன் அவர்களுக்கு எமது சிறப்பான நன்றி உரித்தாகுக.

விழாவிற்கு எம்மோடு தோள் நின்று உழைத்துவரும் உப அதிபர் மற்றும் ஆசிரிய குழாத்திற்கும், மாணவர்களுக்கும் அன்பான பெற்றோர் களுக்கும், பழைய மாணவர்களுக்கும் நன்றி கூறுவதோடு கலை நிகழ்வுகளை நெறியாள்கை செய்து வழங்கிய ஆசிரியர்களுக்கும் நன்றி கூறி அறிக்கையினை நிறைவு செய்கிறேன்.

நன்றி

**– அதிபர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புப் பரிசு பெறுவோர் விபரம் - 2013

| இல | மாணவர் பெயர் | தரம் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வழங்குபவர் |
|---|---|---|---|---|---|---|
| 01 | அ. தனுசியா | 01 | பண்ணிசைப்போட்டி | 3 | --- | திரு. நடராசா இராசையா சகோதரர்கள் நினைவாக பாலசிங்கம் சசிகரன் |
| 02 | கெ. யஸ்மினி | 02 | பண்ணிசைப்போட்டி | 1 | 1 | |
| 03 | வி. கிருசாந்தினி | 02 | பண்ணிசைப்போட்டி | 2 | ---- | திரு. க. உமாபதிசிவம் நினைவாக உமாபதிசிவம் ரவீந்திரன் |
| 04 | கி. தஸ்மி | 03 | பண்ணிசைப்போட்டி | 2 | ---- | |
| 05 | தே. வஸ்ணவி | 05 | பண்ணிசைப்போட்டி | 2 | ---- | |
| 06 | சு. கிருசாந்தி | 05 | பண்ணிசைப்போட்டி | 1 | ---- | திருமதி வள்ளிப்பிள்ளை கந்தையா நினைவாக திருமதி சற்குணவதி சோமசுந்தரம் |
| 07 | கி. தஸ்மி | 03 | வாய்பாடு மனனம் | 3 | ---- | |
| 08 | வி. ரவிராஜ் | 04 | வாய்பாடு மனனம் | 3 | ---- | |
| 09 | ஜெ. டிலான்சன் | 05 | வாய்பாடு மனனம் | 2 | ---- | செல்வி சிவாஜினி நினைவாக திருமதி நிர்மலா சிவகுமார் |
| 10 | சி. ஜென்சிகா | 11 | தமிழ்த்தினப் போட்டி, கட்டுரை வரைதலும், இலக்கியம் நயத்தலும் | 3 | ---- | திருமதி ஈ. பொன்னம்மா நினைவாக ஈஸ்வரக்குருக்கள் கெங்காதரக்குருக்கள் |
| 11 | ச. துலக்சன் | 06 | வாசிப்பு | 2 | ---- | |
| 12 | அ. தர்சிகா | 06 | Copy Writing | 2 | ---- | |
| 13 | கி. தஸ்மி | 03 | தனி ஆங்கிலப் பாடல் | 2 | --- | திருமதி சின்னம்மா மகாலிங்கம் நினைவாக திரு. ம. ஜெயக்குமார் |
| 14 | அ. அபிசாந் | 02 | பந்தெறிதல், நி. நீளம், 50m வலயமட்டம் | 1 | | செல்வி நகுலநாயகி நினைவாக செல்வி ஜெ. தம்பாப்பிள்ளை |
| 15 | அ. பிரியா | 03 | பண்ணிசை, மாற்று ஆற்றல் | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| இல | மாணவர் பெயர் | தரம் | போட்டி விபரம் | குடும்ப மட்டம் | கோட்ட மட்டம் | வழங்குபவர் |
|---|---|---|---|---|---|---|
| 16. | அ. பிரியா | 03 | விளையாட்டு விழா - வலயமட்டம்<br>பந்தெறிதல் - 1ம் இடம்<br>50m ஓட்டம் - 2ம் இடம்<br>நின்று நீளம் - 3ம் இடம்<br>பேச்சு - விசேடதேவை - 3ம் இடம் | | | திரு. வை. கந்தையா நினைவாக<br>திரு. க. தயாபரன் |
| 17 | ந. றொபினா | 04 | | | | திரு. எஸ். இராமசாமி நினைவாக<br>இராமசாமி தனபாக்கியம் |
| 18 | ஜெ. டிலான்சன் | | தரம் 5இல் புலமைப்பரிசில் பரீட்சையில் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர் - 147 புள்ளி | | | திரு.திருமதி விநாயகர்<br>இலட்சுமிப்பிள்ளை நினைவாக<br>திருமதி இ. பற்குணராஜா |
| 19 | வி. ஜெனிஸ்வன் | | " "<br>114 புள்ளி | | | திருமதி ஜெ. கலாதரன் |
| 20 | சி. நிருசா | | 2013 க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள்<br>4A, B, 2C, S | | | திரு. முருகேசு பொன்னம்பலம்<br>நினைவாக திரு. நடராசா<br>ராஜ்குமார் |
| 21 | நி. ஜென்சிகா | | A, B, 4C, 2S | | | திரு. ந. பொன்னுத்துரை<br>(வத்தானைபுலம்) நினைவாக<br>சின்னத்தம்பி ராதாகிருஷ்ணன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கர்மவீரர் அமரர் கந்தையா அதிபர்

"தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று"

என்னும் குறட்பாக்கமைய தோன்றியவர் அதிபர் கந்தையா அவர்கள். இலங்கையின் பல பாகங்களிலிருந்தும் வரும் யாத்திரிகர்கள் கீரிமலையைத் தரிசிக்காமற் செல்லமாட்டார்கள். அப்படிப்பட்ட சிறப்புப் பொருந்திய கீரிமலையில் ஒரு கல்விக் கூடம் இல்லையே என்ற பல பெரியார் மத்தியில் நிலவிய குறையை நீக்கியவர் அதிபர் கந்தையா அவர்களே! பாடசாலை ஆரம்பிக்கும் போது நீர்வசதி, நிழல் மரங்கள் அற்ற பாலைவனம் போன்றிருந்த பகுதியில் நிழல் மரங்கள் நாட்டப்பட்டு அயற் கிணற்றில் நீர் மொண்டு நீர்ப்பாய்ச்சி சோலைவனமாக்கிய பெருமை அதிபரையே சாரும். அவரோடு அந்நேரம் தோளோடு தோள் கொடுத்துதவியவர் சரவணமுத்து ஆசிரியரேயாகும். சொற்ப மாணவருடன் ஆரம்பித்து பல நூற்றுக்கணக்கான மாணவர்களைக் கொண்ட வித்தியாலயமாக்கி குறுகிய காலத்தில் மகாவித்தியாலயமாக்கிய பெருமையும் அதிபர் அவர்களையே சாரும்.

ஆரம்ப காலத்தில் மாணவர்களை "பிள்ளைகளே!" எங்கே படிக்கிறீர்கள்? என்று கேட்டால், "கந்தையா வாத்தியாரின் பள்ளியில் என்பர். சிறிது காலத்தின் பின் எங்கே படிக்கிறீர்கள் என்று கேட்டால் "கோணாவலைப் பாடசாலை" என்பர். இன்னும் சிறிது காலத்தின் பின் "கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தில்" என்றும் கூறினர். இப்படிப் பாடசாலையின் பெயர் மாற்றத்துக்கும் அதன் வளர்ச்சி, உயர்ச்சிக்கு காரணமாக இருந்தமை அதிபர் அவர்களின் அயராத முயற்சியேயாகும்.

அதிபர் அவர்கள் ஓர் ஆசிரியரைப் பாடசாலைக்கு எடுப்பாரேயானால் அவரில் ஒரு திறமை இருக்கும். இவ்வித்தியாலயம் கல்வி, பேச்சுப்போட்டி, விளையாட்டுப்போட்டி, நாடகப்போட்டிகளில் சிறந்து விளங்கியதுமன்றி பண்டிதர் அமரர்.கனகசபை ஆசிரியர் விவசாயத்திற்குப் பொறுப்பாக இருந்த போது யாழ் மாவட்டத்தில் விவசாயப் போட்டியில் முதலிடம் வகித்தமை குறிப்பிடத்தக்கது. சைவப்புலவர் திரு. சு. செல்லத்துரை ஆசிரியர் அவர்களும் அதன்பின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமதி கோகிலா மகேந்திரன் ஆசிரியை அவர்களும் பணியாற்றும் போது சிறந்த நாடகங்களை மேடையேற்றினர். சாரணியத்துக்கு திரு. சு. சிவபாதரத்தினம் ஆசிரியர் அவர்களும் குருளைச் சாரணருக்கு செல்வி. சி. முத்தையா ஆசிரியை அவர்களும் பொறுப்பாக இருந்து சிறப்புப் பணியாற்றினர். இவ்வித்தியாலயம் பல விழாக்கள் நடாத்துவதற்கு உகந்த இடமாக அமைந்தது மாத்திரமல்லாமல் வெளி மாவட்டத்திலிருந்து வரும் பாடசாலைச் சாரணியர் இங்கு தங்கியிருந்து கூடாரமிட்டுப் பயிற்சிப் பட்டறை நடத்துவதற்கு உகந்த இடமாக அமைந்தமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் அவர்கள் வெளியே செல்வாராயின் அ∴து பாடசாலை விடயமாகவே இருக்கும். போகும் போது சோர்ந்த நடையுடனும் ஆழ்ந்த சிந்தனையுடனும் செல்வார். வீர நடையுடனும் வெற்றிச் சிரிப்புடனும் திரும்புவார். எந்த விடயத்திலும் தோல்வியைத் தழுவுவது கிடையாது. அப்படி நிகழின் "முயற்சி திருவினையாக்கும்" என்பதற்கமைய வெற்றியடையும் வரை முயற்சித்துக் கொண்டேயிருப்பர்.

அதிபர் அவர்கள் தனது புத்திசாதுர்யத்தால் திணைக்கள அதிகாரிகள் முதற்கொண்டு பாராளுமன்ற உறுப்பினர் வரை தன்வயப்படுத்தும் சக்தி வாய்ந்தவர். இவ் வித்தியாலயத்தின் பெரிய கட்டடம் தந்தை செல்வா அவர்களாலும், அடுத்த கட்டடம் எதிர்க்கட்சித் தலைவராகவிருந்த அமிர்தலிங்கம் அவர்களாலும் மற்றைய கட்டடங்கள் பாராளுமன்ற உறுப்பினர், கல்வி அதிகாரிகளாலும் திறந்து வைக்கப்பட்டமை இதற்கு எடுத்துக்காட்டாகும். ஆரம்ப காலத்தில் விழாக்கள் நடாத்தும் போது சங்கீதம், நடனம் போன்றவற்றிற்கு ஆசிரியர் இன்மையால் அவற்றில் திறமை வாய்ந்த ஆசிரியர்களை அழைத்து மாணவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அக் குறையை நீக்கினார். விரைவில் சங்கீதம் நடனத்துக்குரிய ஆசிரியர்கள் நியமனம் பெற்றனர்.

அதிபர் அவர்கள் எங்கள் வீட்டு வைபவம் ஒன்றிற்கு தளர்ந்த நடையுடனும் நோய்வாய்ப்பட்டு மெலிந்த உடலுடனும் வருகை தந்தார். அங்கு இருந்தவர் சிலர் மத்தியில் தான் நகுலேஸ்வராவை ஆரம்பித்தமை முதற்கொண்டு அதன் வளர்ச்சிக்கு உழைத்தமை பற்றி உற்சாகத்துடன் எடுத்துரைத்துக் கொண்டிருந்தமை வியப்புக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயிருந்தது. அதிபர் அவர்களின் பேச்சு மூச்சு எல்லாம் பாடசாலை யாகவே இருந்தமை குறிப்பிடத்தக்து.

இதன் காரணமாக அவரது இறுதி ஊர்வலத்தின் போது பல பெரியார்கள், ஊரவர்கள், பாடசாலைச் சமூகத்தவர் ஆகியோரின் வேண்டுகோளுக்கமைய அன்னாரது பூதவுடல் அவரது பாடசாலையில் வைக்கப்பட்டு அஞ்சலி உரைகளும் நிகழ்த்தப்பட்டு மௌன அஞ்சலியும் செலுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இவ்வித்தியாலத்தை அதிபர் அவர்கள் உடல், பொருள், ஆவி மூன்றையும் அர்ப்பணித்து உருவாக்கியதாலன்றோ! இன்றும் இப்பாடசாலைக்கு கடமையாற்றவரும் அதிபர் ஆசிரியர்கள் அதன் தனித்துவம் பேணுவதிலும் அதன் வளர்ச்சிக்கு உழைப்பதிலும் கண்ணும் கருத்துமாக இருப்பதுடன் பழைய மாணவர், அபிவிருத்திச் சங்கம் அவர்களுக்கு உற்சாகமூட்டி உதவிக்கரம் கொடுத்து உரமேற்றி உழைத்துக் கொண்டிருப்பதையும் காணக்கூடியதாய் இருக்கிறது.

குழந்தையானது தன் அன்னையின் மடியிலிருந்தே முதன் முதல் "அ" என உச்சரித்து "அம்மா" என அழைக்கத் தொடங்குகிறது. அதுபோல் நகுலேஸ்வர அன்னையிடம் ஆரம்பக்கல்வி பயின்றவர்கள் உள்ளூரிலும் சரி, வெளியூரிலும் சரி ஏன்? உலகளாவிய ரீதியில் வாழ்ந்து கொண்டிருக்கிறீர்கள். உங்கள் நகுலேஸ்வர அன்னை யானவள் இடம் பெயர்ந்து இன்னல்கள் பல அனுபவித்து மீண்டும் சொந்த இடத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்றாள். இவ்வேளையில் "நன்றி மறப்பது நன்றன்று" என்ற வாக்கிற்கமைய நீங்கள் செய்யும் சிறு உதவியானது "சிறுதுளி பெரு வெள்ளம்" போல் உங்கள் அன்னையானவள் பெரும் விருட்சம் போல் தழைத்தோங்கி எதிர்காலச் சிறார்களையும் உருவாக்கி சகல வளங்களும் பெற்று விளங்க உதவுமல்லவா?

எனவே நம் எல்லோருடைய உதவியுடன் நகுலேஸ்வர அன்னையானவள் வளர்ச்சிகள் பல பெற்று பல ஆண்டு விழாக்களை காணவேண்டுமென விழைவதுடன் அதற்கு இறை அருளையும் வேண்டி நிற்கிறேன்.

**திருமதி. தனபாக்கியம் இராமசாமி**
முன்னாள் அதிபர்
நியூசிலாந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# English Language Teaching in Schools

English has a unique place in Sri Lanka. Brought by the British as an instrument of colonization, it has taken several roles in the past few centuries, as official language, as a medium of instruction and as a language of the elite. It is continued to be used in interstate communication, as the language of the courts of Law as one of the languages at school. English is no more a foreign language and for a good number of Sri Lankans it is the first language. There are many assumptions and theories dealing with the nature of language teaching and learning. Linguistics and psychology provided theoretical foundations for developing principles and practices of language teaching. These theories constitute an approach.

As the method of teaching words in context, they are introduced using objects and pictures and through actions students listen to the teacher and imitate him. Not only words but also reading material and grammar points are presented orally. The teacher devotes the first few weeks of teaching to pronunciation. The words are presented in contexts. Grammar is taught inductively without resorting to giving rules. Grammar points are introduced through visual presentation and situations. This is followed by practice. Words and grammar items are graded and arranged accordingly. The vocabulary and structures are chosen from every day English and they are learnt through speech. As the spoken language is the starting point, it encourages normal conversation and the students use the new words and structures in real life situation. There are three stages in the school curriculum. In the first stage the teacher aims at familiarizing the students with English speech sounds. The students are trained to discriminate between sounds and show the difference in their production. In the second stage, the first stage is continued



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

and reading is introduced and writing skill also developed. In the third stage the study of literature is introduced.

This method has many merits. It is a natural method and is based on the natural way of learning a language. As the mother tongue is not used, the student is forced to think in English and express himself in English. Students attain correctness in their expression. Learning becomes easy and interesting as audio visual aids are used and students actively participate. The sentence is taken as a unit and it is linguistically sound and is emphasized it is pedagogically correct.

There are many disadvantages in this method. Not all words can be taught through direct association. Synonyms and definitions have to be given for many words. The neglect of formal grammar and giving less importance to reading and writing skills are cited as other short comings. There are practical difficulties too. Teachers must be native speakers or must have like mastery of the language.

In the constructivist classroom, the teacher's role is to prompt and facilitate discussion. Thus, the teacher's main focus should be on guiding students by asking questions that will lead them to develop their own conclusions on the subject. Parker J.Palmer (1997) suggests that good teachers join self, subject and students in the fabric of life because they teach from an integral and undivided self, they manifest in their own lives, and evoke in their students, a capacity for connectedness. So, as a teacher it's their duty to provide a good knowledge of English to the students according to their capacity Teacher must be a path and guide to the students to acquire the proper language to use it in a real life situation.

**Mrs. S. Gowrykanthan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் இல்லாத உலகை நோக்கி

- திருமதி. யாழினி சத்தியசீலன்

அனைத்துலக காசநோய் நாள் மக்களிடையே காசநோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 அன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது. காசநோய் இன்று உலகில் 1.7 மில்லியன் மக்களை ஆண்டுதோறும் கொன்று குவிக்கும் ஒரு முக்கிய உயிர் கொல்லி நோயாக உள்ளது. முக்கியமாக மூன்றாம் உலக நாடுகளில் இந்நோய் இன்னமும் கட்டுக்கடங்காமல் உள்ளது.

மார்ச் 24, 1882ஆம் ஆண்டில் டாக்டர் றொபேட் கொச் (Robert Koch) என்பவர் காசநோய்க்கான காரணியை (TB Bacillus) பெர்லினில் அறிவித்து அறிவியல் உலகை வியப்பில் ஆழ்த்தினார். அந்நாளில் இந்நோய் ஐரோப்பா, மற்றும் அமெரிக்காவில் ஏழு பேருக்கு ஒருவரின் உயிரைக் காவு கொண்டு வந்தது. கொச்சின் இக் கண்டுபிடிப்பு காசநோய் பற்றி முழுமையாக அறிய வழிவகுத்தது.

1982ஆம் ஆண்டில் இக் கண்டுபிடிப்பின் நூற்றாண்டு நினைவு நாளில் காசநோய் மற்றும் இருதய நோய்களுக்கெதிரான அனைத்துலக அமைப்பு (International Union Against Tuberculosis and Lung Disease - IUATLD) மார்ச் 24 ஆம் நாளை உலக காசநோய் நாளாக அறிவிக்க வேண்டுகோள் விடுத்தது. 1996ஆம் ஆண்டில் இருந்து உலக சுகாதார அமைப்பு (WHO) இந்நாளை காசநோய் விழிப்புணர்வு நாளாக அறிவித்தது.

## நோயின் தாக்கம்

காசநோயானது பொதுவாக நுரையீரலைத் தாக்கி நோயுண்டாக்கினாலும் இவை நரம்புத்தொகுதி, நிணநீர்த்தொகுதி, இரைப்பை, குடல் தொகுதி, எலும்புகள் மூட்டுகள், குருதிச் சுழற்சிப்பாதை, சிறுநீரக பாலுறுப்புக்கள், தோல் போன்ற பற்பல பகுதிகளிலும் நோயுண்டாக்க வல்லவை. இந்நோய் பொதுவாக TB



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என குறிப்பிடப்படுகிறது. TB என்பது Tuberculosis Bacillus என்பதன் சுருக்கமாகும். இந்நோயானது இருமல், தும்மல், உமிழ்நீர் போன்ற வற்றிலிருந்து காற்றில் பரவும் தன்மை கொண்டது. நோயைக் கண்டுபிடிக்க நெஞ்சில் X கதிர் படப்பிடிப்பு தோலில் செய்யப்படும். Tuberculin பரிசோதனை உடல் நீர்மங்களின் நுண்ணுயிர் வளர்ப்பு மெய் தேர்வு (பரிசோதனை) என்பன பயன்படுத்தப்படுகின்றன. இந் நோய்க்கு எதிராக BCG எனப்படும் எதிர்ப்பூசி போட்டுக் கொள்வது பல நாடுகளில் நடைமுறையிலுள்ளது. ஒவ்வொரு நொடியிலும் புதிதாக ஒருவர் இந்நோய்த் தாக்கத்திற்குள்ளாவதாக அறியப்படுகிறது. இந்நோயானது ஆசிய ஆபிரிக்க நாட்டினரில் 80% உம் அமெரிக்காவில் 5 - 10% உம் காணப்படுகிறது.

## சிகிச்சை

ஆறுமாத காலத்துக்குக் கட்டாய சிகிச்சை அத்தியாவசியம் தவறுமிடத்து எதிர்ப்பு சக்தியுடைய நோய்க் கிருமிகள் உருவாகி நோயைக் குணப்படுத்த முடியாத நிலை ஏற்படும்.

## தடுப்பூசி

BCG தடுப்பூசி குழந்தை பிறந்து 4 கிழமைக்குள் கொடுக்கப்பட வேண்டும். இதன் போது தழும்பு (Scar) ஒன்று உருவாகும். இத் தழும்பு உண்டாகாதவிடத்து ஆறுமாதம் தொடக்கம் 5 வயது காலத்திற்குள் இவ்வூசி மீண்டும் கொடுக்கப்பட வேண்டும். மூன்று கிழமைகளுக்கு மேல் இருமல் இருக்குமிடத்து உடனடியாக மருத்துவ ஆலோசனை பெறவும் மக்கள் நெரிசலான இடங்கள், சூரிய வெளிச்சம் உள்வராத வீடுகள் இந்நோய் பரவுவதை ஊக்குவிப்பன வாகும்.

வலுவூட்டும் உணவுக் குறைபாடு இருப்பது இலகுவில் இந்நோய் தொற்ற வழிவகுக்கும். பசும்பாலினாற் பரவும் காசநோயைத் தவிர்க்க நன்கு கொதிக்க வைத்த பால் அல்லது பாய்ச்சர் முறையிற் பதனிட்ட பாலை அருந்தவும். காசநோய் வந்தவர்கள் Rifampicin, Isoniasid, Pyriminamide, Ethambutol போன்ற மருந்துகளைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து ஆறுமாதகாலம் பயன்படுத்த வேண்டும். மருந்து உட்கொள்ளும் காலத்தில் கிரந்தித் தன்மை கொண்ட மீன், ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி போன்ற உணவுகளைத் தவிர்த்தல் வேண்டும். மது அருந்துதல், புகைப்பிடித்தல் போன்றவையும் தவிர்க்கப்பட வேண்டும்.

✪✪✪

# My Friend

- My best Friend is Anujan
- He lives at Keerimalai
- He is nine years old.
- His Father and mother both are labourers.
- Anujan Studies at J/Keerimalai Naguleswara Maha Vidyalayam.
- He is in Grade Four there.
- He is a very clever student.
- He goes to school on foot.
- His Favourite subject is Maths.
- His pet is a parrot.
- He likes to play football.
- His hobby is collecting stamps.
- I love my friend very much.

**S. Vajeekaran**
Gr - 04



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏக்கம்

உதயபுரம் என்னும் கிராமத்தில் வசித்து வந்தவன் சிவா. இவன் சிறுவனாக இருந்த வேளையிலே தந்தை இறந்துவிட்டார். இவனுக்கு ஒரு தங்கை. இவர்கள் இருவரையும் தாயார் கூலி வேலை செய்து வளர்த்து வந்தாள். சில காலங்கள் நகர சிவாவே குடும்பப் பொறுப்பை ஏற்றான்.

இவன் தங்கை மீது தீராத பாசம் வைத்து வளர்த்து வந்தான். தங்கையைப் படிக்க வைத்து பெரியாள் ஆக்குவது இவனது கனவாக இருந்தது. தங்கை சோபி ஆரம்பத்திலிருந்து பதினொராம் தரம் வரை தனது கிராமத்தில் கல்வி கற்றுவந்தாள். அக்கிராமத்தில் மேலதிகக் கல்வி கற்பதற்கு வசதிகள் இல்லாத காரணத்தால் தங்கையை நகரத்திலிருந்த இந்துக் கல்லூரியில் கல்வி கற்பதற்காக அனுப்பி வைத்தான். இவன் தங்கையைப் பிரிந்து ஒரு நொடிகூட இருந்ததில்லை. இருந்தாலும் தங்கையை பெண்கள் கல்லூரி விடுதியில் சேர்த்து வைத்தான்.

இவனும் தாயாரும் வீட்டில் தங்கையின் எண்ணத்திலேயே வாழ்ந்து வந்தனர். சில மாதங்கள் கழித்து தாயார் புற்று நோய் காரணமாக இறந்து விட்டார். அதற்குப் பின் தங்கை தான் உலகம் என்று வாழ்ந்து வந்தான். நாட்டில் பிரச்சினைகள் நேரத்தொடங்கின. ஆட்கடத்தல்கள், அசம்பாவிதங்கள் நடந்துவந்தன. ஒருநாள் சோபி பாடசாலை சென்றுகொண்டிருந்த வேளையில் ஆட்கடத்தல் காரர்களால் கடத்திச் செல்லப்பட்டாள். சிவா தங்கையை தேடாத இடமுமில்லை, வேண்டாத தெய்வங்களுமில்லை. இரண்டு மாதங்கள் கழிந்ததும் சிவாவுக்கு அதிர்ச்சியான செய்தி ஒன்று கிடைத்தது. சோபி சுட்டுக்கொலை செய்யப்பட்டு நகரத்தில் உள்ள பாலத்தின் கீழ் சடலமாக கிடக்கிறாள் என்ற செய்தி கிடைத்ததும் தங்கைதான் என்று வாழ்ந்து வந்த சிவா தங்கை இறந்துவிட்டாள் என்ற ஏக்கத்தில் தன் உயிரையும் நீத்தான்.

**இ. ஜெனோசீலன்**
தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் தாய் நாட்டிற்கு

காலை ஏழுமணி இருக்கும் அனைவரும் பரபரப்புடன் வேலை செய்து கொண்டிருந்தார்கள். சிங்கப்பூரில் எப்போதுமே அப்படித்தான். அனைவரும் சுறுசுறுப்பாக வேலை செய்து கொண்டிருப்பார்கள். ஆனால் கந்தன் இன்னும் தூங்கிக்கொண்டே இருந்தான்.

கந்தா.... கந்தா... என்று அவனது நண்பன் வேலன் அழைத்தான். “என்னடா மச்சான் வந்து இவ்வளவு நாளாயிடிச்சு இன்னும் நமக்கு ஒரு வேலை கெடைக்கல. இங்க வேல இருக்குனு கூட்டிக்கிட்டு வந்து இப்படி விட்டுட்டாங்களே” என்று கந்தன் புலம்பத் தொடங்கினான்.

சரிடா குளிச்சிட்டு ரெடியாகு. இன்னைக்கும் போய்ப் பார்ப்போம் என்றான் வேலன்.

கந்தன் யாழ்ப்பாணத்தில் உள்ள சிறிய கிராமத்தைச் சேர்ந்தவன். அம்மா, அப்பா இரு சகோதரர்கள். இவன்தான் மூத்தவன். சிறு வயது முதலே படிப்பில் சிறந்த கெட்டிக்காரனாக இருந்தான். வகுப்பில் முதல் மாணவனாக வருவான். எதிர்காலத்தில் வைத்தியராக வந்து தம்மக்கள் அனைவருக்கும் இலவசமாக வைத்தியம் பார்க்க வேண்டும் என்ற கனவை தன் மனதில் சுமந்து காணப்பட்டான். இவ்வாறாக சாதாரண தரத்தில் நினைத்தபடியே சிறந்த சித்திபெற்று உயர்தரத்தில் நகரப்பாடசாலை ஒன்றுக்குச் சென்று விஞ்ஞான பாடத்தைக் கற்றான். நகரப் பாடசாலையின் சூழல் இவனது கனவுகளையும், கல்வியினையும் மெது மெதுவாக அழித்தது. சில புதிய நண்பர்கள் புதிய வழிகளை இவனுக்குக் கற்றுத்தரத் தொடங்கினர்.

“கந்தா நாமெல்லாம் படித்து என்னடா செய்யப் போகிறோம். இங்க என்னதான் படித்து வேலைக்குப் போனாலும் இங்கு எல்லாம் சம்பளம் குறைவு” என்றான் குமரன்.

“இல்லடா நான் வைத்தியராகனும் எங்கள ஏழை மக்களுக்கு உதவ வேண்டும்” என்றான் கந்தன்.

“இங்க பாரு, நம்ம என்னதான் கஷ்டப்பட்டாலும் நம்ம வேலை செய்ற சம்பளம் நமக்கே பத்தாது. இதுல மக்களுக்கு உதவ போராராம்” என்று கிண்டலாகக் கூறிச் சிரித்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக நண்பர்களின் வார்த்தை இவனுக்கு வேதமாகியது. சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணம் இவனைச் சூழ்ந்து கொண்டது. கனவுகள் மறைந்தது. உயர்தரப் பரீட்சையிலும் சித்தியெய்த தவறினான். உடனே இவனது மனம் வெளிநாட்டை நாடியது. இவனது பெற்றோர் எவ்வளவு கூறியும் தன் தாயின் நகைகளையும் மாடுகளையும் விற்று வெளிநாட்டிற்குச் சென்றான். இன்று ஒரு மாத காலமாகியும் வேலை இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறான்.

ஐந்து மணியாகியது. இருவரும் தாம் தங்கியிருந்த விடுதிக்கு வந்தார்கள். வேலன் குளிக்கச் சென்றான். பல்வேறு நினைவுகளுடன் கந்தன் கட்டிலில் அமர்ந்தான். "இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை" அப்படி சொல்கிறமாதிரி என் வாழ்க்கை போயிடுச்சே. நம்ம ஊரில நெறையக் காசு சம்பாதிக்க முடியாட்டியும் நிம்மதி இருக்கு. வீட்டில எல்லாத்தையும் விட்டுவிட்டு வந்து இங்க கெடந்த கஷ்டப்படுறதவிட கூழ் குடித்தாலும் வீட்டில ஒன்னா இருந்து குடித்தா மனசுக்கு எவ்வளவு சந்தோசம். வீட்டில எல்லாக் காசையும் அழிச்சிட்டோம். எப்படியாவது ஊருக்குப்போய் அங்க உள்ள நம்ம நெலத்தில கஷ்டப்பட்டு விவசாயம் பார்த்து நான் என்ன தொழிலுக்கு ஆசைப் பட்டேனோ அதப்போல என் தம்பி ரெண்டு பேரையும் வரவைக்கனும். என் குடும்பத்தை சந்தோசமா வைக்கனும் என்று மனதில் கூறி உறுதி செய்தான்.

வேலனிடம் தனது முடிவைக் கூறினான. முதலில் எதிர்த்தவன் பின் அவனது முடிவை ஏற்றான். ஊருக்குப் போகும் முயற்சியில் ஈடுபடத் தொடங்கினான்.

இரவு எட்டு மணியாகியது. அவனை அறியாமலேயே இவ்வளவு நாள் எங்கோ தொலைத்த நிம்மதியான உறக்கம் இன்று அவனுடன் உறவு கொண்டாட வந்தது.

முற்றும்

**சிந்துஜா**
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாடிய றோஜாவின் ஏக்கம்

நான் ஒரு வாடிய றோஜா. இன்று எவராலும் பறிக்கப்படாது செடியிலே இருப்பவள். எனது ஏக்கத்தை யாரிடமாவது கூறவேண்டும் போல் உள்ளது. இன்றைய பொழுது மிகவும் அழகாக இருக்கின்றது. சூரியன் தனது தங்க நிற ஒளிக் கதிர்களை பூமியில் பரப்பியபடி மெது மெதுவாக வானத்தை அலங்கரிக்க ஆயத்தமான வேளை பறவைகள் கீதம் பாடி கோயில் மணி சத்தமிட பூ மொட்டுக்கள் மலர்ந்து தேனீக்கள் ரீங்காரம் செய்து சூரியனை வரவேற்றன.

நானும் எனது செவ்விதழ்களை விரித்து சூரியனை வரவேற்று மகிழ்ச்சியடைந்தேன். எனது அந்த சந்தோசம் நிலைக்கவில்லை. ஏனென்று தெரியுமா... எந்த பூவும் மலரும்போது நாம் சாமி பாதத்துக்கு போகவேண்டும் என்று கருதியே மலரும். நானும் அவ்வாறு எண்ணியே மலர்ந்தேன். பலர் நாமிருந்த பூந்தோட்டத்துக்கு சாமிக்கு மலர் பறிப்பதற்காக வந்தனர். எல்லோரும் கூச்சலிட்ட வண்ணம் ஓடி ஓடி பலவிதமான பூக்களைப் பறித்தனர். ஆனால் யாருமே என் அருகில் வரவில்லை. நானும் அவர்கள் என்னையும் சாமி பாதத்தில் அலங்கரிப்பார்கள் என்று எண்ணிய வண்ணம் ஒவ்வொருவரையும் பார்த்துக்கொண்டிருந்தேன். பொழுதோ வேகமாக ஓடிக்கொண்டிருந்தது. சூரியன் தனது ஒளிக்கீற்றின் வெப்பத்தை அதிகரித்த வண்ணம் இருந்தான்.

வெப்பம் தாங்கமுடியாது எனது இதழ்கள் சுருங்கத் தொடங்கின. மாலைப் பொழுது இன்னும் சிலர் பூப்பறிக்க நானிருக்கும் பூந்தோட்டத்துக்கு வந்தனர். அவர்களில் ஒருவராது என்னை பறிப்பார்கள் என எண்ணிக்கொண்டிருந்தவேளை ஒரு சிறுமி என்னைக் கண்டாள். இங்க பாருங்க இது மிகவும் அழகாக உள்ளது. ஆனால் கொஞ்சம் வாடி இருக்கிறது. என்ன செய்ய சாமிக்கு வைக்கவா என இன்னொருவரிடம் வினவினாள். வேண்டாம் வாடின பூ என்னத்துக்கு என்று கூற அவளும் என்னை விட்டுவிட்டு சென்றாள். எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. என்னை நானே நொந்தபடி அவர்கள் போகும் திசையை வெறித்துப் பார்த்தபடி நின்றேன்.

**யோ. யோவனியா**
**தரம் – 11**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Time - காலம்

| | | |
|---|---|---|
| Calendar | - | நாள்காட்டி |
| Clock | - | கடிகாரம் |
| Second | - | விநாடி |
| Minute | - | நிமிடம் |
| Hour | - | மணி |
| Day | - | நாள் |
| Date | - | திகதி |
| Month | - | மாதம் |
| Year | - | வருடம் |
| Decade | - | பத்து ஆண்டு |
| Century | - | நூறு ஆண்டு |
| Era | - | யுகம் |
| Fortnight | - | பதினான்கு நாட்கள் |
| Morning | - | காலை |
| Fore noon | - | முற்பகல் |
| Noon | - | பகல் |
| Evening | - | மாலை |
| Night | - | இரவு |
| Mid Night | - | நள்ளிரவு |
| Sunrise | - | சூரிய உதயம் |
| Sunset | - | சூரிய அஸ்தமனம் |

**J. Dipiniya**
Grade -10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடைந்து போன தாயின் உள்ளம்

செல்வி.அ.ஜெஜீபா
(ஆசிரியர்)

பசுமை நிறைந்த வயற் கரைக்கு அருகாமையில் ஒரு சிறிய கிராமம். அக் கிராமத்தின் நடுவே ஓர் சிறிய குடிசை. அந்தக் குடிசையில் தான் இக் கதை ஆரம்பிக்கிறது.

தான் பெற்றெடுத்த செல்வத்திற்காக கூலி வேலைக்குச் சென்று, தனது சரீரத்தைச் சாறாய்ப் பிழிந்து உழைக்கிறாள் மாதவி. சிறுவயதிலே திருமணமாகிய மாதவி, கஸ்ரத்தின் மத்தியிலும் தனது கணவனை இழந்து சிறு குடிசையிலே வாழ்ந்து வருகிறாள்.

தான் பெற்றெடுத்த மகன் நாட்டில் நல்லவனாகவும் வல்லவனாகவும் வரவேண்டும் என்ற விருப்போடு தான் மகனை கல்வி கற்க வைக்கிறாள். ஆனால் அவளின் கற்பனை கலைகிறது. நாட்டில் இயற்கை மாறியது. விஞ்ஞான விந்தை உலகெங்கும் பரவியது. மனித மனங்கள் மாறி உலகமே சுருங்கி விட்டது.

மாதவி மகனைப் படிப்பதற்காக நகரத்திற்கு அனுப்புகிறாள். தான் கஸ்ரப்பட்டு வெயிலிலே காய்ந்தாலும் தன் மகனை கஸ்ரம் தெரியாது வளர்த்து வருகிறாள். ஆனால் விஸ்ணு, தாயின் மனநிலையை உணரவில்லை. ஒரு நாள் பாடசாலைக்குச் சென்ற விஸ்ணு, வகுப்பறையிலே வீட்டுப்பாடம் செய்யவில்லை என்பதற்காக ஆசிரியரால் தண்டிக்கப்பட்டான். அவன் உடனே ஆசிரியரை தலை நிமிர்ந்து பேசினான். தகாத வார்த்தைகளால் ஆசிரியரை பேசிக் கொண்டு மேசை கதிரைகளை தூக்கி எறிந்தான். பொறுமையிலே சிறந்த ஆசான் மீண்டும் அவனை அணைத்து சில புத்திமதிகளைக் கூறினார். ஆனால் விஸ்ணு, செவிடன் காதில் சங்கு ஊதியது போல அவர் பேச்சை கேட்காது நின்றான். பாடசாலையில் தான் பெரியவன் தன்னை எதிர்க்க, எவராலும் முடியாது என்று நினைத்துக் கொண்டு வீடு சென்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் மகன் பெரியவனாக வருவான் என்ற எண்ணத்தோடு மகனைக் கட்டி அணைத்தாள். சில நிமிடங்கள் மௌனமாக இருந்த விஷ்ணு, அம்மா பரீட்சைக்காசு, கட்ட பணம் தாருங்கள் என்று கேட்டான். மகனுக்காக வாழும் மாதவி, தனது காதில் இருந்த தோட்டைக் கழற்றி விற்று விஷ்ணுவிற்கு பணம் கொடுத்தாள். மிகுந்த ஆனந்தத்துடன் மகன் பாடசாலை சென்று விட்டான் என மாதவி நினைத்தாள்.

பணத்தை வேண்டிச் சென்ற விஷ்ணு நண்பர்களோடு சென்று அரட்டை அடித்தான். மது போதைக்கு அடிமையானான். மகனின் பழக்கம் தாய்க்கு புரியவில்லை. பரீட்சை நெருங்கியது மகனுக்கான நிறை உணவுகளை சமைத்துக் கொடுத்தாள். மகனுக்கு வேண்டிய பணிவிடைகளைச் செய்து மகனைப் பரீட்சைக்கு ஆயத்தம் செய்தாள். பரீட்சைக்கு என்று சொல்லி விட்டு சென்ற விஷ்ணு, பரீட்சை மண்டபத்தை அடையவில்லை. நண்பர்களோடு திரைப்படம் பார்ப்பதற்கு சென்று விட்டான். தனது மகனுக்கு விருப்பமான உணவை சமைத்துக்கொண்டு ஓடிச் சென்றாள் பாடசாலைக்கு. அங்கு தனது மகன் பரீட்சைக்கு தோற்றவில்லை என அறிந்து கொண்ட தாய் மகனைக் காணாது துடித்தாள். தனது மகனுக்கு ஏதோ நடந்து விட்டது என்று அழுதபடியே பாதையோரம் நடந்து சென்றாள். மகனைக் காணாது அங்கும் இங்கும் அலைந்தாள். தியேட்டர் வாசலிலே தன் மகன் மதுபோதைக்கு அடிமையாகி இருப்பதைக் கண்ட தாய் கதறி அழுதாள்.

பத்து மாதம் கருவிலே சுமந்த தாய் கணவனை இழந்து மகனுக்காக எத்தனை கஸ்ரங்களை அனுபவித்தாள். அவள் ஆசையெல்லாம் அழிந்ததை நினைத்து கதறி அழுதாள். பாதையிலே விழுந்த அவள் இறைவனடி சேர்ந்து விட்டாள். வீடு சென்ற விஸ்ணு, தாயைப் பார்த்து கதறி அழுதான். தாயின் இறுதிக் கடமை செய்வதற்கு கூட பணம் இல்லாது அலைந்தான். உறவினர் யாரும் உதவி செய்யவில்லை. நண்பர்களும் அவனை விட்டு விலகிச் சென்று விட்டார்கள் தான் செய்த தவறை நினைத்து அழுதான் கிராமத்தில் யாருமே அவனை மதிக்கவில்லை. உலகத்திலே விலை மதிக்க முடியாத பொக்கிஷம் அம்மா என்று சொல்லி கதறி அழுதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க்கையிலே பெற்றோரை மதிக்காமல் ஆசிரியருக்கு மதிப்புக் கொடுக்காமல் மது போதைக்கு அடிமையாகி நண்பர்களை நம்பி நடுத்தெருவிற்கு வந்து விட்டேன் என உணர்ந்தான். ஒரு வேளை உணவு உண்ண முடியாத நிலையிலே இருந்த விஷ்ணுவிற்கு அதிக புகைப்பிடித்தலும் அதிக மது பாவனையும் அவன் உயிரிற்கு வலை வீசியது. புற்று நோய்க்கு ஆளாகிய விஷ்ணு தாய் இறந்த 30 நாளையில் அவனும் இறந்து விட்டான்.

சின்னஞ்சிறார்களே இந்தச் சிறு கதை உங்களுக்கு ஒரு பாடமாக இருக்க வேண்டும். "இன்றைய சிறார்கள் நாளைய தலைவர்கள்" என மனதில் கொண்டு வெற்றிப் பாதையை நோக்கிச் செல்லுங்கள்.

✦✦✦

# விதியை வெல்லும் மனிதன்

வாழ்வின் இலக்கியமாய்
உலகின் விந்தைகளாய்
இறைவனின் படைப்புக்களாய்
விளையாட்டுப் பொம்மைகளாய்

விஞ்ஞானம் காரணமாய்
வியப்புடனே செயற்பட்டான்
விதியைவென்று இன்று
விருதுகளைப் பெறுகின்றான் மனிதன்

**ஜெ.டிலான்சன்**
தரம் - 6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்டைய காலமும் இன்றைய மனிதனும்

இறைவன் தந்த இயற்கையை
இச்சையுடன் வரவேற்காது
இம்சையாக அழிக்கின்றான்
இன்றைய மனிதன்

காலங்கள் உருண்டோட - அன்று
காலன் வந்தழைத்தாலும்
காலம் தாழ்த்தாமல் உடன் சென்றான்
இன்று காலால் உதைக்கின்றான்
காலனையும் காலத்தையும்

ஜெ. டிலக்சிகா
தரம் -07

பூமியில் அன்றே அவன்
புனிதமாய்க் காலத்தை கழித்தான்
இன்றோ பூமியைப் புதைகுழியாக்கி
புன்மை செய்கிறான்.

விந்தையான இயற்கையை
விரைவில் கண்டான்
விஞ்ஞானத்தின் விளைவால்
விலகி நின்றான்.

# சாதனை செய்வோம்

சின்னஞ் சிறார்களே எம் உரிமைகளை
சிறப்புடனே பெற்றிடுவோம்.
சீராகக் கடமைகளைப் புரிந்து
அகிலத்தை ஆள்பவனாய் சாதனை செய்வோம்.

எழுச்சி கொண்டவனாக
வீழ்ச்சியில் துவண்டிடாமல்
பாதை மாறாது நேரான பாதையில்
பயணிப்போம் சாதனை செய்வோம்.

சி.சாயிகா
தரம் - 8



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியத்தகு மனிதன்

விஞ்ஞான உலகினிலே
விரைந்து புறப்பட்டு
விந்தை செய்கிறான்
வியத்தகு சூழலில்
விருப்புடன் வாழ்க்கையை
வியப்புடன் செய்கிறான்
விளைந்த வித்துக்களும்
விழுந்த விழுதுகளும்
விளைந்திடச் செய்திடவே
விரைவுடன் செயற்படுகிறான்
வியத்தகு மனிதனவன்.

ஈ.வானுப்பிரியா
தரம் - 10

## சமாதானம்

உலக மக்களிடம் உதித்ததே ஞானம்
அவர்கள் வேண்டி நிற்பதே சமாதானம்
பெண்ணிற்கு வேண்டியது நிலைத்து நிற்கும் மானம்
கோடி மக்களை வாழ வைப்பதே சமாதானம்

காதிற்கு மகிழ்ச்சி இனிமையான கானம்
வாழ்விற்கு இனிமை நிலையான சமாதானம்
அழகான மலரிற்கு நறுமணம் வேண்டும்
இவ்வுலக மக்களுக்கு என்றும் சமாதானம் வேண்டும்

பணம் இல்லையெனில் பிழைப்பது கடினம்
சமாதானம் இல்லையெனில் மனிதன் வாழ்வதே கடினம்
வளர்ந்து வரும் உலகில் பிழையேதும் இல்லை
சமாதானம் வேண்டி வருந்தாதவரே இல்லை

மரம் வளர நீர் தேவை
மக்கள் முகம் மலர சமாதானம் தேவை
இயற்கையின் கொடையில் குறை ஏதும் இல்லை
சமாதானம் கிடைத்தால் சந்தோசம் வேறில்லை.

அ. ஜான்சிகா
தரம் - 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் தாயே

பத்து மாதம் எனை சுமந்து
பத்திரமாய் தவழவிட்ட
பாசமிகு என் அன்னை

இரத்தத்தைப் பாலாக்கி
இரையாக எனக்களித்து
இரவு பகல் பாராது
இனிமையுடன் என்னை வளர்த்து

ஈரைந்து மாதங்கள்
வாடகை எதுவுமின்றி உன்
வயிற்றில் எனை சுமந்து
வளர்த்தெடுத்த என் தாயே
உன்னை எத்தனை
யுகங்கள் சென்றாலும்
மறவேன் என் தெய்வத்தாயே.

இ. கீர்த்திகா
தரம் - 11

## புகை எமக்குப் பகை

காசை தண்ணீர் போல் இறைத்து
காசினியில் பெரும் நோயை
விலைக்கு வாங்கும் மானிடா
விரைகின்றாய் மரணம் நோக்கி
விதி விலக்கு இல்லையே
புகையால் நீ மடிவது திண்ணமே

இளவயதில் சுவாச நோயும் இதய நோயும்
இதமுடன் உன்னை நாட
இருமி இருமியே நீ வாட
இதை உணராமல் நீ ஆட
இன்பங்கள் அகன்று ஓட
இயமன் நெருங்குகின்றான் உன்னை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையால் ஆயுளைக் குறைக்கின்றாய்
புற்றுநோயை வரவேற்கின்றாய்
புன்னகை புரிய மறுக்கின்றாய்
புகையால் பகையை வளர்க்கின்றாய்
புவியை புகையால் நிறைக்கின்றாய்
புனித வாழ்வை இழக்கின்றாய்

புலர்கின்ற பொழுது நீயும்
புகைத்தலை எதிர்த்திடுவாய்
புகை எமக்குப் பகையென
புரிந்து கொண்டு நீயும்
புதுப்பொலிவு பெற்று
புதுயுகம் படைத்திடுவாய்.

சியான்சன்
தரம் - 9

## எமது ஆசிரியர்கள்

அன்பு என்னும் மெட்டமைத்து
பண்பு என்னும் பாட்டமைத்து
அறிவுடன் எம்மைக் கட்டமைத்து
பரிவுடன் கல்வி ஊட்டியவர்கள்

நல்லொழுக்கம் பல போதித்து
பல்துறையில் நாம் சாதித்து
பெருமையைச் சேர்க்க
பொறுமையுடன் வழி காட்டுபவர்கள்.

பிழைகள் பல திருத்தியெமை
கலைகள் பலவும் கற்பித்து
சிலைகள் போல் மிளிர வைத்து
மலைபோல் எம்மை நிமிர வைத்தவர்கள்.

பார் எமைப் போற்ற
நற்குடிகளாய் எம்மை மாற்ற
எம் வாழ்வில் தீபம் ஏற்ற
தம்மை மெழுகாக்கியவர்கள்.

ஜதுர்சா சிவபாதம்
தரம் - 9



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண் குழந்தையே

பெண் குழந்தையே
சமைத்து விளையாடுவது
ஒரு விளையாட்டோ?
இது உன் கருவிலே வந்த
அறிவல்லவோ?
இது தெய்வத்தின் அறிவல்லவோ
கொடையல்லவோ இது வயதிலே
வந்த ஆர்வமல்லவோ!
இது முதிர் வயது வரையும்
வரும் உன் ஊக்கம் உனக்கு
உயர்வைத் தரும்!
உன் எதிர்காலம் இக்கலையில்
புகழ் அடையச்செய்யும் அல்லவோ!



க.நறோஜா
தரம் - 8

# மயில்

1) மயில் அழகான பறவை ஆகும்.
2) மயில் பூச்சி, புழு தானியம் முதலியவற்றை உண்ணும்.
3) மயிலின் குரல் ஒலி "அகவுதல்" எனப்படும்.
4) முருகனின் வாகனம் மயில்.
5) ஆண் மயிலுக்கு தோகை உண்டு.
6) மழை முகிலைக் கண்டால் மயில் தோகையை விரித்து ஆடும்.
7) மயில் முட்டையிட்டு குஞ்சு பொரித்து தனது இனத்தைப் பெருக்கிக் கொள்ளும்.
8) இந்தியாவின் தேசியப்பறவை மயில் ஆகும்.
9) மயில் காட்டுப் பறவையாக இருந்த போதிலும் சிலகோயில்களில் மயிலை வளர்க்கின்றார்கள்.
10) வேட்டையாடி மயில் இறைச்சியை உண்பார்கள்.
11) மயிலின் தோகையை எடுத்து அலங்காரப் பொருள்கள் செய்வார்கள்.
12) தோகையில் பச்சை, நீலம், ஊதா, மஞ்சள் ஆகிய நிறங்கள் காணப்படும்.
13) கந்தபுராண நூலில் சூரனே சேவலும் மயிலுமாக மாறியதாக கூறப்படுகின்றது.

இ.ரிஷாந்
தரம் - 1



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகுலேச்சரம்

ஈழத்துச் சிவாலயங்களுள் வரலாற்றுச் சிறப்பு மிக்கது நகுலேச்சரம் ஆகும். இது இலங்கையிலுள்ள வடகரையிலுள்ள கீரிமலை என்ற இடத்தில் உள்ளது. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற இம் மூன்றும் ஒருங்கே அமையப் பெற்ற சிவாலயமாக இது பெரிதும் விளங்குகின்றது. இதனால் இலங்கையிலுள்ள பிரசித்தி பெற்ற ஆயிரத்தெட்டு சிவத்தலங்களுள் இதுவும் ஒன்றாக உள்ளது.

கீரிமலையின் புராதனப் பெயர் திருத்தம்பலை ஆகும். அங்கு திருத்தம்பலேசுவரப் பெருமான் கோயில் கொண்டிருந்தார். இத் தலத்தை கீரிமலை என அழைக்கப்படுவதற்கு கதை ஒன்று உள்ளது. முன்னொரு போது மேருமலையின் ஒரு பக்கத்தில் சுதாமா என்னும் பெயருடைய முனிவர் ஒருவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவ்வேளை அவர் அருகே ஒரு வேடன் சென்றான். தன் தவத்திற்கு இடையூறு செய்த வேடனை சுதாமா முனிவர் சாபமிட, அவருக்கு கீரிமுகம் வாய்க்கப் பெற்றது. இதனால் வருத்தமுற்ற வேடன் முனிவரை வணங்கி சாபவிமோசனம் தருமாறு மன்றாடினான். பின் முனிவரும் இரக்கம் கொண்டு வேதாரணியத்திற்குத் தெற்கில் உள்ள கடலிலே இலங்கை என்ற தீவு உண்டு. அங்கே சென்று அதன் வடக்கே உள்ள மலையில் போய் கர்மயோகம் செய். கீரிமுகம் நீங்கும் என்றார். அத்தோடு கர்மயோகப் பயிற்சியையும் வழங்கினார். அவ்வேடன் அவ்வாறே இலங்கை வந்து கர்மயோகம் செய்தான். அவ்விடத்தே உள்ள நீர்த்துறையில் நீராடினான். அவனது கீரிமுகம் நீங்கியது. அன்று முதல் அவ்வேடன் நகுல முனிவர் எனப்பட்டார். கீரி என்பது வடமொழியில் நகுலம் எனப்படும். கீரிமுகம் மாறிய இடம் கீரிமலை என்றும் நகுலகிரி என்றும் வழங்கப்பட்டு இன்று அத்தலம் நகுலேச்சரம் என்று அழைக்கப்படுகிறது. நகுலமுனிவர் வணங்கிய இறைவன் நகுலேசுவரர் என்றும் இறைவி நகுலாம்பிகை என்றும் பெயர் பெற்றனர். இந்தக் கதையினை "வனம் சார் தீர்வை முகம் அகன்ற வாய் அதனால் இவ் வரைக்கும்" என்ற நகுலகிரி புராணப் பாடலில் மிகத் தெளிவாக அறியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜயன் இலங்கையை ஆட்சி செய்தபோது இவ்வாலயத்துக்குச் சில திருப்பணிகளைப் புரிந்ததாக வரலாறு கூறுகின்றது. இவ்வாலயத்தின் புராதனச் சிறப்புக்களை தட்சிணகைலாய புராணம், கைலாயமாலை, நகுலாசலப்புராணம், நகுலமலைக் குறவஞ்சி, நகுலகிரிப் புராணம் போன்ற நூல்கள் கூறுகின்றன. இவ்வாயலத்தின் தீர்த்தம் கண்டகி தீர்த்தம், நகுலதீர்த்தம் எனச் சில காலங்கள் அழைக்கப்பட்டது. மாருதப் புரவீகவல்லி தன் குன்மநோய் நீங்கப் பெற இத் தீர்த்தத்திலேயே நீராடியதாகவும் ஒரு வரலாறு உண்டு. இத் தீர்த்தம் பிதிர் கிரியை வழிபாட்டுக்குத் தனியிடம் பெறுகின்றது. இங்கு ஆறுகால பூசைகளும் நித்திய கிரியைகளாக இடம் பெற்று வருகின்றன. மகோற்சவம் மாசி மாதத்தில் பதினைந்து நாட்கள் நடைபெற்று மகா சிவராத்திரியில் தீர்த்தோற்சவம் நடைபெறும். இவற்றோடு வார விழாக்கள், மாத விழாக்கள் போன்ற நைமித்திய கிரியைகளும் நடைபெற்று வருகின்றன.

**ச.சிந்துஜா**
*தரம் - 10*

# *சிறந்த சிந்தனை*

காந்தி அடிகள் புகையிரதத்தில் பயணம் செய்து கொண்டிருக்கும் வேளையில் அவரின் காலில் இருந்த செருப்பு ஒன்று கீழே விழுந்தது அவர் அவ்விடத்திலேயே மறு செருப்பையும் கீழே விழுத்திவிட்டு உள்ளே சென்றார். அப்போது அருகில் இருந்தவர் ஏன் நீங்கள் ஒரு செருப்பு விழுந்ததுக்கு மறு செருப்பையும் போட்டுவிட்டு வந்தீர்கள் என்று கேட்டபோது அவர் கூறினார். ஒரு செருப்பை வைத்து எனக்கும் பயன் இல்லை அச் செருப்பை எடுப்பவர்களுக்கும் பயனில்லை என்றார். அப்போது அவரின் நல்ல சிந்தனை அவர்களுக்கு வியப்பூட்டியது.

**க. பிரிதா**
*தரம் - 11*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிப்புறா

கறுப்பு, பழுப்பு போன்ற நிறங்களில் இருக்கும். கறுப்பில் வெள்ளைப் புள்ளிகள் இதன் அழகுக்கு அழகூட்டுகின்றன. 30 சென்ரிமீற்றர் நீளம் வரை இருக்கும். பறக்கும் போது வாலை விரித்துக் கொண்டு பறப்பது பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

எளிதில் மனிதரோடு பழகிவிடும் இயல்புடையது. தானியங்களை விரும்பிச் சாப்பிடும். பெரும்பாலும் நிலத்திலேயே காணப்படும். மற்றைய புறாக்களைப் போல அல்லாமல் தனியாகவே இரை தேடும். காடுகளின் ஆரம்ப இடங்களில் வசிக்கும். ஆனால் காட்டுக்கு உள்ளே செல்லாது.

மணிப்புறா தென்கிழக்கு ஆசியாவின் பல பகுதிகளில் அதிகம் காணப்படும். தற்போது அமெரிக்கா, வடக்கு இந்தோனேசியா, அவுஸ்ரேலியா மற்றும் நியூசிலாந்திலும் மணிப்புறாக்கள் உள்ளன.

**க.கேன்சிகா**
*தரம் - 10*

# ஜோர்ஜ் கீத்

- 1901இல் பிறந்தவர்.
- கண்டி திரித்துவக் கல்லூரியில் கல்வி கற்றார்.
- தனது 10 வயதில் "சிலுவையில் யேசு" எனும் சித்திரத்தை வரைந்து விருது பெற்றார்.
- மல்வத்த பீடத்தைச் சேர்ந்த பிக்குவான பின்னவல தீரானந்த தேரோவிடம் பௌத்த சமயக் கருத்துக்களையும் இந்திரநாத் தாகூரின் நூல்கள் மூலம் இந்து சமயக் கருத்துக்களையும் விளங்கிக் கொண்டார்.
- சமஸ்கிருத காவியமான கீதகோவிந்தத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார்.
- இந்திய ராகம் தொடர்பான விளக்கங்களைப் பெற்று அது தொடர்பான பல சித்திரங்களை வரைந்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவிசிலுமின முலதெவதாவா போன்ற சிங்கள காவியங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்.
- இவரது சிறந்த ஓவியங்களாக கிருஷ்ணன் ராதை காதல் காட்சிகள், ராகினி, விராகினி, தலதா பெரகரா, குயவன் வேலைத்தளம், நாயிகா, யமனும் சாவித்திரியும் போன்றன காணப்படுகின்றன.

**ந. திலக்சியா**
*தரம் - 11*

# *வாழ்க்கையில் முன்னேற 7 வழிகள்*

## 1) நன்மை தரும் 7 விடயங்கள்

- ஏழ்மையிலும் நேர்மை
- கோபத்திலும் பொறுமை
- தோல்வியிலும் விடாமுயற்சி
- வறுமையிலும் உதவி செய்யும் மனம்
- துன்பத்திலும் துணிவு
- செல்வத்திலும் எளிமை
- பதவியிலும் பணிவு

## 2) வழிகாட்டும் 7 விடயங்கள்

- சிந்தித்துப் பேசு
- உண்மையைப் பேசு
- அன்பாகப் பேசு
- மெதுவாகப் பேசு
- சமயம் அறிந்து பேசு
- தேவையானவற்றைப் பேசு
- இனிமையாகப் பேசு

**ச. கபில்தாஸ்**
*தரம் - 9*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செம்மொழிகள்

உலகில் 07 மொழிகள் பழம் பெருமை வாய்ந்த செம்மொழிகளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. குறித்த ஒரு மொழி செம்மொழியாக இருப்பதற்குத் தேவையான அம்சங்கள்.

1. மொழியின் தொன்மை - 2000 ஆண்டுகளிற்கு முன்பே இலக்கிய இலக்கணம் கண்ட தொன்மை
2. தனித்தன்மை, தனித்துவம்
3. அனைவரும் ஏற்றுக் கொள்ளும் பொதுப்பண்பு
4. நடுநிலைமை
5. உயர் சிந்தனை
6. மொழிக்கோட்பாடு
7. தாய்த்தன்மை - பல மொழிகளுக்குத் தாயாக இருக்கக்கூடிய தகுதி
8. பண்பாடு, கலை, பண்பாட்டு வெளிப்பாடு
9. இலக்கிய வளம்
10. பிறமொழித் தாக்கமில்லாத் தன்மை
11. கலை, இலக்கியத்தின் தனித்தன்மை

## செம்மொழிகளாக ஏற்றுக் கொள்ளப்பட்ட மொழிகள்

| | |
|---|---|
| தமிழ் | ஹீப்ரு |
| சமஸ்கிருதம் | கிரேக்கம் |
| சீனம் | பாரசீகம் |
| இலத்தீன் | |

தமிழ்மொழி இந்தத் தகுதிகளில் 11 ஐயும் கொண்டுள்ளது.

*ஜெ. டிபினிஜா*

தரம் - 10



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓணம் பண்டிகை

ஆவணி மாதத்துப் பூரணையுடன்
கூடிய திருவோண நட்சத்திரத்தில்
ஓணம் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

ஓண நட்சத்திரம் திருமாலுக்குரிய
விசேட நட்சத்திரமாயினும்
எவ்வித வேறுபாடுமின்றிச்
சைவசமயத்தவர்களாலும் கொண்டாடப்படுகின்றது.

ஆவணி மாதத் திருவோண
நட்சத்திரம் நடராஜப் பெருமானுக்குரிய
விசேட அபிஷேகத் தினங்களில் ஒன்றாகும்.

கொழும்பிலுள்ள பொன்னம் பலவாணேச்சர
ஆலயத்தில் இந்த அபிஷேகத்தினம் சிறப்பாக
அனுஷ்டிக்கப்படுகின்றது.

இலங்கையில் வாழும் இந்தியப்
பூர்வீகமுள்ள மக்களிடையே சிறப்பாக
மலையாளிகளிடையே ஓணம் பண்டிகை
இன்றும் முக்கிய பண்டிகையாக கொண்டாடப்படுகின்றது.

இப் பண்டிகையின் போது மலையாளிகள்
புத்தாடை அணிவார்கள்.

ஓணம் என்ற சொல்லுக்கு ஆறு
என்ற பொருளும் உண்டு.

**தே.வைஷ்ணவி**
*தரம் - 06*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## படித்ததில் பிடித்தது

உண்மையை விலை கொடுத்து வாங்குங்கள் ஆனால்
ஒரு போதும் விற்று விடாதீர்கள்.

தியாகியின் இரத்தத்தை விட
அறிஞரின் எழுதுகோல் மேலானது

படித்துக் கெட்ட ஆணில்லை.
பணிவால் கெட்ட பெண்ணில்லை.

அறிவால் அறிபவனை விட அனுபவித்து
அறிபவன் அறிஞன்.

சு. சுபாசினி
தரம் - 8

அறிவுரையை ஏற்றுக் கொள்ளுங்கள்
சொல்பவரை விட நீங்கள் பயன் பெறக் கூடும்.

## இலங்கை பற்றிய தகவல் துளிகள்

- இலங்கை நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவு.
- இலங்கை 1948ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது.
- இலங்கை 1972ஆம் ஆண்டு குடியரசாக மாறியது.
- இலங்கையின் முதலாவது பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க ஆவார்.
- இலங்கையின் நிறைவேற்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன.
- இலங்கையின் முதலாவது ஜனாதிபதி வில்லியம் கோபல்லாவ.
- இலங்கையின் தேசிய கீதத்தை இயற்றியவர் ஆனந்த சமரக்கோன்.
- இலங்கையின் உயரமான மலை பேதுருதாலகால மலை.
- இலங்கையின் மிக உயரமான நீர் வீழ்ச்சி பம்பரகந்த.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இலங்கையின் தேசிய பறவை காட்டுக்கோழி.
- இலங்கையின் தேசிய மரம் நாகமரம்.
- இலங்கையின் தேசிய மலர் நீலோற்பலம்.
- இலங்கையின் மிகப்பெரிய தாவரவியற்பூங்கா பேராதனையில் அமைந்துள்ளது.
- இலங்கையின் இயற்கைத் துறைமுகம் திருகோணமலையில் அமைந்துள்ளது.
- இலங்கையின் இலவசக் கல்வியின் தந்தை C.W.W கன்னங்கரா ஆவார்.
- இலங்கையின் கலாசார முக்கோணப் பிரதேசம் அனுராதபுரம், பொலனறுவை, கண்டி.
- இலங்கைக்கு வெள்ளரசுக் கிளையைக் கொண்டு வந்தவர் சங்கமித்தை.
- இலங்கையில் புனித வெள்ளரசு நடப்பட்ட இடம் மிகிந்தலை.
- இலங்கையில் தமிழர், சிங்களவர், முஸ்லீம், பறங்கியர் எனும் நான்கு வகையான மக்கள் வாழ்கின்றனர்.
- இலங்கையின் தேசியக் கொடி வாளேந்திய சிங்கம் ஆகும்.

## *எனது பாடசாலை*

- எனது பாடசாலையின் பெயர் யா/கீரிமலை நகுலேஸ்வர மகா வித்தியாலயம்
- எனது பாடசாலை வடமாகாணத்திலுள்ள யாழ் மாவட்டத்தில் அமைந்துள்ளது.
- எனது பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 11 வரையிலான வகுப்புக்கள் உள்ளன.
- எமது அதிபரின் பெயர் திரு.த.தயானந்தன்.
- எமது வகுப்பாசிரியரின் பெயர் திரு.சி.கௌரிதரன்
- எனது பாடசாலையில் மைதானம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எனது பாடசாலையில் விஞ்ஞான ஆய்வுகூடம் அமைந்துள்ளது.
- எனது பாடசாலையில் 221 மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள்.
- எனது பாடசாலை கலவன் பாடசாலை ஆகும்.
- எமது மாணவர்கள் குடும்ப மட்டம் மற்றும் கோட்ட மட்டப் போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைக்கிறார்கள்.
- எமது பாடசாலையின் அருகில் கீரிமலை நகுலேச்சர ஆலயம் அமைந்துள்ளது.

**பிரியா**
*தரம் - 4*

# பொது அறிவு

- வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும் பூக்கள் யாவை?
  அந்தூரியம், ஓர்க்கிட்

- எத் தாவர இலைகள் உணவாகப் பயன்படும்?
  வல்லாரை, குறிஞ்சா, கீரை, முருங்கை, பொன்னாங்கண்ணி

- இலங்கையில் உள்ள மாகாணங்கள் எத்தனை?
  ஒன்பது

- இலங்கையில் மிக உயரமான மலை எது?
  பீதுரு தாலகால மலை

- இலங்கையின் வடக்கே உள்ள அயல் நாடு எது?
  இந்தியா

- இலங்கை அமைந்துள்ள கண்டம் எது?
  ஆசியாக் கண்டம்

- இலங்கையைச் சுற்றியுள்ள சமுத்திரம் எது?
  இந்து சமுத்திரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ காலானில் அதிகளவு காணப்படும் உணவுக்கூறு யாது?
புரதம்

❖ இலங்கையின் தேசிய மரம் எது?
நாகமரம்

❖ இலங்கையின் தேசிய மலர் எது?
நீலோற்பலம்

❖ இலங்கையின் தேசியப் பறவை எது?
காட்டுக்கோழி

## கோபத்தைக் கையாளும் வழிமுறைகள் சில

❖ ஆழமாகச் சுவாசியுங்கள்.

❖ பத்து வரை எண்ணுங்கள்.

❖ எண்ணிக்கொண்டே ஆழமாகச் சுவாசியுங்கள்.

❖ அமைதியான, இளைப்பாறுதலான ஓர் இடத்தை கற்பனை செய்யுங்கள்.

❖ நேரான எண்ணங்களை உபயோகித்து உங்களை நீங்களே உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

❖ கடவுள் ஒருவர் உண்டு என நினையுங்கள்.

❖ உங்களிடம் ஏற்கனவே உள்ள நல்ல காரியங்களுக்கு நன்றி சொல்லிக் கொள்ளுங்கள்.

❖ கோபத்துக்குரியவர் முன்னே நின்றால் அவரைப் பார்ப்பதைத் தவிருங்கள். அதனைக் கற்பனையில் பல தடவை நடாத்திப் பாருங்கள்.

❖ கோபத்தைத் தூண்டியவர் முன்னே இருப்பதாகக் கருதி அவருடன் பேசுங்கள்; அவர் எது சொன்னாலும் கேளுங்கள்.

❖ ஒரு நாளில் கோபமூட்டியவரை வரையுங்கள், அல்லது அவர் இருப்பதாகக் கற்பனை பண்ணுங்கள். பின்னர் அந்தத் தாளை அவராக நினைத்து அவரை என்ன செய்ய நினைத்தீர்களோ அதனைச் செயலாக்குங்கள்.

*தொகுப்பு : **கி. தஸ்மி***
*தரம் - 4*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிந்து கொள்ளுங்கள்

## உலகில் மிகப் பெரியவை

01) உலகிலேயே மிகப் பெரிய கண்டம் எது?
ஆசியா

02) உலகிலேயே மிகப் பெரிய பாலைவனம் எது?
சகாரா

03) உலகிலேயே மிகப் பெரிய தேவாலயம் எது?
உரோமாபுரியில் உள்ள சென் பீற்றர்ஸ் தேவாலயம்

04) உலகிலேயே மிகப் பெரிய நீர்வீழ்ச்சி எது?
வெனிசுலா

05) உலகிலேயே மிகப்பெரிய தனி நாடு எது?
பிரேசில்

06) உலகிலேயே மிகப்பெரிய நூதனசாலை எது?
பிரிட்டிஸ் நூதனசாலை

07) உலகிலேயே மிகப்பெரிய வளைகுடா எது?
மெக்சிக்கோ வளைகுடா

08) உலகிலேயே மிகப்பெரிய பூங்கா எது?
கனடாவிலுள்ள அல்பெடா என்னும் இடத்திலுள்ள உப்பீலஸ்லோ தேசியப் பூங்கா

09) உலகிலேயே மிகப்பெரிய தீபகற்பம் எது?
இந்தியா

10) உலகிலேயே மிகப்பெரிய கடல் எது?
பசுபிக் பெருங்கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11) உலகிலேயே மிகப்பெரிய தீவு எது?
கிறீன்லாந்து

12) உலகிலேயே மிகப்பெரிய நாடு எது?
ரஷ்யா

13) உலகிலேயே மிகப்பெரிய அருங்காட்சியகம் எது?
அமெரிக்க இயற்கை வரலாற்று அருங்காட்சியகம்

14) உலகிலேயே மிகப் பெரிய வங்கி எது?
உலக வங்கி

15) உலகின் ஒரேயொரு இந்துமத நாடு எது?
நேபாளம்

16) உலகிலேயே மிக நீளமான சுவர் எது?
சீனப் பெருஞ்சுவர்

17) உலகிலேயே மிக உயரமான விமான நிலையம் எது?
திபெத்

தொகுப்பு : **வி. பிரித்திகா**
*தரம் - 05*

★ ★ ★

# பழமொழிகளும் அவற்றின் கருத்துக்களும்

1. காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
சந்தர்ப்பத்தைத் தவறவிடாதே.

2. நாமொன்று நினைக்க தெய்வமொன்று நினைத்தது.
எண்ணியபடி எதுவும் நடப்பதில்லை.

3. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
ஒருவரது உள்ளத்தின் சிந்தனை முகத்தில் தென்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.
திறமை உள்ளவன் எதைக் கொண்டும் சாதிப்பான்.

5. திக்கற்றவனுக்குத் தெய்வமே துணை.
யாருமற்ற மனிதனை இறைவனே காப்பாற்றுவான்.

6. உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
நன்றி மறவேல்.

7. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.
தனிக்குடித்தனம் அவசியம்

8. கீரைக்கடைக்கும் எதிர்க்கடை வேண்டும்.
எதற்கும் போட்டி அவசியம்.

9. சூடுகண்ட பூனை அடுப்பங்கரையை நாடாது.
அனுபவம் ஆபத்து வராமல் தடுக்கும்.

10. அழுத பிள்ளை பால் குடிக்கும்.
முயற்சி செய்தவர் பயன் பெறுவார்.

11. இரக்கப் போனாலும் சிறக்கப்போ.
வறுமையிலும் செம்மையாக வாழ வேண்டும்.

12. பேராசை பெருந் தரித்திரம்
எல்லை கடந்த ஆசை துன்பம் தரும்.

13. ஆத்திரக் காரனுக்குப் புத்தி மத்திமம்.
கோபம் வருமிடத்தில் நிதானம் குறைந்துவிடும்.

14. கோபம் பாவத்தைத் தேடும்.
கோபம் ஒருவனுக்குத் தீமையை ஏற்படுத்தும்.

15. முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்.
விடாது முயற்சி செய்தால் வெற்றி கிட்டுவது நிச்சயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. விளையும் பயிரை முளையிலே தெரியும்.
ஒருவனின் சிறு வயதுப் பழக்கங்களை வைத்து அவனைப் பற்றி மதிப்பிடலாம்.

17. தொட்டிற் பழக்கம் சுடுகாடு வரை
இளமையில் பழகும் பழக்கங்கள் இறக்கும் வரை நிலைத்து நிற்கும்.

18. அன்பான சினேகிதனை ஆபத்தில் அறியலாம்.
உத்தம நட்பு

19. கிட்டாதாயின் வெட்டென மற.
கிடைப்பதற்கு அரிதான ஒன்றை மறப்பது நல்லது.

20. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.
விடாது முயற்சி செய்தால் பயன் கிடைக்கும்.

21. ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு.
வீண் செலவு செய்தாலும் அதில் கண்ணாயிரு.

22. ஆழம் அறியாமல் காலை விடாதே.
எதையும் ஆராய்ந்து செய்.

23. இளங்கன்று பயமறியாது.
வாலிபத் துணிவு

24. இக்கரை மாட்டுக்கு அக்கரை பச்சை
திருப்தி அற்ற மனம்

25. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.
கவர்ச்சியானவை எல்லாம் நல்லவை அல்ல.

26. போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து.
மன நிறைவே ஒருவனுக்கு சிறந்த செல்வமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

27. கூழானாலும் குளித்துக்குடி
சுத்தத்தின் அவசியம்

28. நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.
நோயில்லாத வாழ்வே ஒருவனுக்குச் சிறந்த செல்வம்.

29. தாயும் பிள்ளையும் ஆனாலும் வாயும் வயிறும் வேறு.
உறவு வேறு தேவை வேறு.

30. பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு.
தாய்ப்பாசம் மேலானது.

31. இளமையிற் கல்வி சிலையில் எழுத்து.
இளமைக்காலமே கல்வி கற்கச் சிறந்தது.

32. சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்.
பயிற்சியால் பயன் உண்டு.

33. கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.
நம்பிக்கை காக்கும்.

34. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
இளமையிற் செய்.

35. அரசன் எவ்வழி குடிகள் அவ்வழி.
முன் மாதிரி

36. ஆனைக்கொரு காலம் பூனைக்கொரு காலம்.
காலம் மாறும்.

37. உண்ணாச் சொத்து மண்ணாய்ப் போகும்.
உலோபங் கூடாது.

38. அஞ்சினவன் கண்ணுக்கு ஆகாயமெல்லாம் பேய்.
பயமுள்ளவனை எல்லாம் பயமுறுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

39. உலை வாயை மூடலாம் ஊர் வாயை மூட முடியுமா?
பலர் அறிந்த விடயத்தை மூடி மறைக்க முடியாது.

40. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு.
ஒற்றுமையே பலம்.

41. குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.
மனச்சாட்சி உறுத்தும்

42. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.
அவரது பொருள் அவருக்கு பெரிது.

43. ஆனைக்கும் அடி சறுக்கும்.
பெரியவர்களும் தவறு விடலாம்.

44. சிறு துரும்பும் பல் குத்த உதவும்.
எதையும் சிறிது என்று இகழக் கூடாது.

45. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.
ஒற்றுமை.

46. அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சு.
எதையும் அளவோடு செய்ய வேண்டும்.

47. குப்பையில் போட்டாலும் குன்றிமணி மங்காது
நற்புகழ் மங்குவதில்லை.

48. பழகப் பழக பாலும் புளிக்கும்.
தொடர்ந்து செய்யும் போது ஆர்வம் குறையும்.

**சு. பிரணவி**
*தரம் - 05*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபுத் தொடர்கள் உணர்த்தும் உட்கருத்துக்கள்

| | | | |
|---|---|---|---|
| 1. | அடியிடுதல் | - | ஆரம்பித்தல் |
| 2. | அடிநகர்தல் | - | இடம்பெயர்தல். |
| 3. | அடியொற்றுதல் | - | பின்பற்றுதல். |
| 4. | அடிப்படுத்தல் | - | வெற்றிகொள்ளல். |
| 5. | அடிப்பிறக்கிடல் | - | தோற்றோடல். |
| 6. | கழுத்தறுத்தல் | - | தீமை செய்தல். |
| 7. | கழுத்துக் கொடுத்தல் | - | பிறரின் துன்பத்தின் போது உதவி செய்தல். |
| 8. | கண் வளர்தல் | - | நித்திரை செய்தல். |
| 9. | கண் மூடுதல் | - | இறத்தல். |
| 10. | கண்கசக்குதல் | - | துக்கப்படல். |
| 11. | கண்திறத்தல் | - | அறிவு உண்டாதல். |
| 12. | கண்ணாய் இருத்தல் | - | கவனமாயிருத்தல். |
| 13. | கண் மலர்தல் | - | துயில் எழுதல். |
| 14. | காது கொடுத்தல் | - | அவதானித்தல். |
| 15. | காது குத்துதல் | - | ஏமாற்றுதல் |
| 16. | காதில் அடிபடுதல் | - | செய்திபரவுதல் |
| 17. | காலூன்றுதல் | - | நிலைத்துநிற்றல் |
| 18. | காலை வாருதல் | - | ஏமாற்றுதல் |
| 19. | காலாறுதல் | - | ஓய்வெடுத்தல். |
| 20. | கைகொடுத்தல் | - | உதவிசெய்தல். |
| 21. | கைகழுவுதல் | - | தொடர்பற்றுவிட்டு விலகுதல். |
| 22. | கையைக் கட்டுதல் | - | முயற்சி செய்யாதபடி தடுத்தல். |
| 23. | கையளித்தல் | - | ஒப்படைத்தல். |
| 24. | கைகுவித்தல் | - | வணங்குதல். |
| 25. | செவிசாய்த்தல் | - | இணங்கிக் கேட்டல். |
| 26. | தலைகீழாய் நடத்தல் | - | முறைதவறி நடத்தல் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 27. | தலை காட்டுதல் | - | வெளிவருதல் |
| 28. | தலைகீழாய் நிற்றல் | - | பிடிவாதம் கொள்ளல் |
| 29. | நாக்கு வளைத்தல் | - | பழித்தல் |
| 30. | நாக்கு நீளுதல் | - | மிதமிஞ்சிப் பேசுதல் |
| 31. | பல்லைக்காட்டுதல் | - | இரந்து வேண்டல். |
| 32. | முகம் சுழித்தல் | - | குறிப்பால் மறுத்தல் |
| 33. | வால் முளைத்தல் | - | உலகம் பிடிபடல் |
| 34. | வாலாட்டுதல் | - | சேட்டை பண்ணுதல். |
| 35. | வயிறு குளிர்தல் | - | திருப்தியடைதல். |
| 36. | வயிற்றெரிச்சல் | - | பொறாமை அடைதல் |
| 37. | வயிறு கடித்தல் | - | பசியுண்டாதல். |
| 38. | வாய்க்கொழுப்பு | - | அகங்காரம் |
| 39. | அள்ளி இறைத்தல் | - | அதிகமாகச் செலவு செய்தல். |
| 40. | அள்ளிக் குவித்தல் | - | நிறையச் சம்பாதித்தல் |
| 41. | ஒற்றைக் காலில் நிற்றல் | - | விடாப்பிடியாக நிற்றல் |
| 42. | கதை கட்டுதல் | - | பொய்ச்செய்தி கிளப்புதல் |
| 43. | தட்டிக் கொடுத்தல் | - | உற்சாகப்படுத்துதல். |
| 44. | நட்டாற்றில்விடல் | - | ஆபத்தில் கைவிடல். |
| 45. | பூசிமெழுகுதல் | - | குற்றத்தை மறைத்தல். |
| 46. | முதலைக் கண்ணீர் | - | பொய் இரக்கம். |
| 47. | கல்லில் நாருரித்தல் | - | அரும்பாடுபடல். |
| 48. | கடன் கழித்தல் | - | மனமின்றிச் செய்தல் |
| 49. | ஆறப்போடுதல் | - | பிற்போடுதல் |
| 50. | முடிவு கட்டுதல் | - | தீர்மானித்தல் |

**வி.ரவிராஜ்**
*தரம் - 05*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறுவுநர் தினமும் பரிசளிப்பு விழாவும்


## அன்பளிப்புச் செய்தோர் விபரம் – 2014

| | | |
|---|---|---|
| 01. | திரு. உ. பரராசசேகரன் (நகுலன் சஞ்சிகை வெளியீடு) | 20000.00 |
| 02. | திரு. க. தயாபரநாதன் (திரு. வை. கந்தையா ஞாபகார்த்தமாக) | 20000.00 |
| 03. | திரு. உமாபதிசிவம் ரவீந்திரன் (திரு. க. உமாபதிசிவம் ஞாபகார்த்தமாக) | 20000.00 |
| 04. | திருமதி இராமசாமி தனபாக்கியம் (திரு. எஸ். இராமசாமி ஞாபகார்த்தமாக) | 20000.00 |
| 05. | திருமதி யோகேஸ்வரன் அனுராதா (இலண்டன்) (அமரர் திரு. சுப்பிரமணியம் கனகசபை ஞாபகார்த்தமாக) | 20000.00 |
| 06. | திரு. கனகசபை ஜெயந்திரன் (கனடா) (அமரர் திருமதி கனகசபை வள்ளியம்மை ஞாபகார்த்தமாக) | 10000.00 |
| 07. | திரு. பொன்னுத்துரை விக்கினேஸ்வரன் (இலண்டன்) அமரர் திரு. சுப்பிரமணியம் பொன்னுத்துரை ஞாபகார்த்தமாக) | 10000.00 |
| 08. | திரு. சின்னத்தம்பி ராதாகிருஸ்ணன் (திரு. பொன்னுத்துரை (வத்தானைப்புலம்) ஞாபகார்த்தமாக) | 10000.00 |
| 09. | திரு. பாலசிங்கம் சசிகரன் (திரு. நடராசா இராசையா சகோதரிகளின் ஞாபகார்த்தமாக) | 10000.00 |
| 10. | திரு. சிவசண்முகநாதன் சிவகுமார் (திரு. சிவப்பிரகாசம் குஞ்சரபேத்தி ஞாபகார்த்தமாக) | 10000.00 |
| 11. | திரு. நடராசா ராஜ்குமார் (திரு. முருகேசு பொன்னம்பலம் ஞாபகார்த்தமாக) | 10000.00 |
| 12. | ஈஸ்வரக்குருக்கள் கெங்காதரக்குருக்கள் (திருமதி பொன்னம்மா ஞாபகார்த்தமாக) | 5000.00 |
| 13. | திரு. ம. ஜெயக்குமார் (திருமதி சின்னம்மா மகாலிங்கம் ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 14. | திருமதி இராஜலட்சுமி பற்குணராஜா (திரு. திருமதி விநாயகர் இலட்சுமிப்பிள்ளை ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 15. | திருமதி சற்குணவதி சோமசுந்தரம் (வள்ளிப்பிள்ளை கந்தையா ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 16. | திருமதி நிர்மலா சிவகுமார் (செல்வி சி. சிவாஜினி ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 17. | செல்வி சி. சிவமலர் (திருமதி சாந்தகுணதேவி ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 18. | செல்வி ஜெயலக்சுமி தம்பாப்பிள்ளை (செல்வி நகுலநாயகி ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 19. | திருமதி ஜெ. கலாதரன் (திரு. கதிரமலை ஞாபகார்த்தமாக) | 2000.00 |
| 20. | திரு. ந. வேல்ராசா, திரு. ந. ஸ்கந்தராசா சகோதரர்கள் (திரு. கனகசபாபதி நடராஜா (தண்டிகை) ஞாபகார்த்தமாக | 2000.00 |
| 21. | திரு. ம. கேதீஸ்வரன் (சான்றிதழ்கள்) | --- |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org